தொண்டன்

V 4 NO. 28 16 July 1931


JL
m211, N128 KN
N31'4'28
188926

56

KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 4] 1931 ஞ ஜூலை மீ 16உ [No. 28

பொருளடக்கம்.


| | | |
|---|---|---|
| 1. | தலையங்கம் (Leader) | 541 |
| 2. | நவராத்திரி — ஓர் நாடகம் K. N. சுந்தரேசன் B. A. (Hons) | 543 |
| 3. | ஊழ்வினையும் ஆள்வினையும் K. நாராயண ரெட்டிகாரு | 545 |
| 4. | சூளாமணி - (மந்திரசாலைச் சருக்கம்-38—48) K. இராமரத்னம் ஐயர் B.A. | 546 |
| 5. | யாப்பிலக்கணம் (செய்யுள்-வெண்பா) | 548 |
| 6. | மானதசாத்திரம் (இடவுணர்வு) T. P. மீனாக்ஷிசுந்தரம் M.A. B.L. | 550 |
| 7. | அப்பர் (64-கலை-ஆகாய கமனம்) E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. | 552 |
| 8. | கம்பராமாயணம் (நகர்நீங்கு படலம்) T. N. சேஷாசலம் B.A. B.L. | 554 |
| 9. | மதிப்புரை (சுகுணவதி) | 559 |
| 10. | வர்த்தமானம். | 559 |


## கலாநிலயம்

### அருமையினு மருமை.

### 2

188926

**கா**ண்போர் கண்ணும் கேட்போர் செவியும் கருது
வோர் மனமுங் கவரும்படி நிறைவேறிய கருமங்
களே அரிய பெரிய வென்று ஆதரிக்கப்பெறுகின்றன
வாயினும், சொல்வதற் கெளியதாய்ச் செய்வதற்கோ
அரிதினுமரியதாவது அன்பும் அறனும் உடையவோர்
வாழ்க்கையைக் கடைபோக நடத்துதலேயாகும், என்
னும் விடயத்தைச் சென்றவாரந் துவக்கினேம். யாவ
ருக்குந் தெரிந்ததொன்றேபோற் றோன்றினிற்குமிது
மற்று மிகச்சிலரே அறியவல்ல இரகசியங்களில் மிக
நுண்ணியது. இதனில் ஏதேனும் ஐயமுளதேல் அது
தீர்வதற்கு ஒன்றிரண்டு செய்காட்சிகளால் (Experi-
ment) சோதித்துத் தெளியலாமே. இச்சமயம் நும்
அயலில் இருப்பாரை நோக்கி, "இப்பூமிக்குஞ் செவ்
வாய்க் கிரகத்திற்கும் போக்குவரவு நிறுவிவிட்டனர்"
என்று கூறுவீரேல் அவர் "ஆ ஆ!" என வியப்பர்.
"உயிர்நீங்கி மூன்றுநாட்களாகிய உடலிற்கு மாற்
றுயிர் ஊட்ட வோர்மருந்து ஜர்மனியிலே ஒருவர்
கண்டுபிடித்திருக்கின்றார்" என்றக்கால், "இது எதிர்
பார்த்ததே, எனினும் விந்தை விந்தை" என விளம்பு
வார். "புதிய இவ்வாட்சிமுறையால் இரஷ்யாதேயத்
தில் வறுமையென்ற வார்த்தையே இல்லாமற்போ
யிற்று" எனச் செப்பினால் அவருக்கு அத்துணையும்
இறும்பூதா யிருக்கும். "நூற்றிருபத்தேழு பாஷை
கள் இலக்கண இலக்கியங்களோடு கற்றவரொருவர்
இருக்கின்றார்" என இயம்பினால் 'அப்படியா' என்று
ஆச்சரியப்படுவார். "இன்னொருவர் தம் தேயத்திற்
காகப் பதினேழுமுறை சிறைசென் றிருக்கின்றனர்"
என்பதுகேட்கத் தம் வியப்பைவிளம்புவர். இன்னபடி
அவரவர் மனப்பான்மைக்குத் தக்கவாறு ஆற்றுதற்
கரியவைகளாய் எண்ணப்பெற்றுப் பெரிதும் சிறிது
மாய வியப்பிற்கிடனாகவல்லன பலப்பல. இவைகளுக்
கிடையே "நம் அயலகத்து, மாசிலாமணிஎன்பவர் அறம்
பிறழாது எல்லோரிடத்தும் அன்புடையராய் வாழ்ந்து
வருகின்றார்" என்று சொல்வீராயின் அதனைக்கேட்ட
வரிடத்து வியப்பிற்குரிய மெய்ப்பாடொன்றுந் தோன்
றாமை காண்பீர். உண்மையில் நம்முடைய வியப்பெல்
லாம் பொம்மலுற வேண்டுவது இதற்கே. எனினும்,
வியப்பொன்று மில்லாததை வியத்தலும், வியத்தற்
குரியதை மதியாதிருப்பதுந்தான் மாந்தருக் கியல்
பாயிற்றே. "எல்லாவற்றிலும் இவ்வுலகத்தில் ஆச்
சரியமானது எது?" என்று வினவிய இயக்கனுக்கு
உதிட்டிரன், "வீதியிற் பிணமொன்று போகுங்கால்,
புதியதொன்று காண்பார்போல் சனங்கள் தம் மனை
வாயில் விரைந்துவந்து நோக்குதலே விந்தையினும்
விந்தை" என இயம்பிய விடை ஏற்கப்பெற்றது.
சாதலோ புதியதல்லாததாயிருக்க, அதனைக்கண்டு அதி
சயிக்கும் மக்கள்தாம், அரிதினும் அரிதாய நல்வாழ்
வொருவன் நடத்துகின்றான் என்பதைக் கேட்டு விய
வாமை விந்தையன்றெனின், வேறென்று கூறலரிது.
ஒருவன் நல்வாழ்வு வாழ்வதைக் கேட்டவுடன் மற்
றவன் வியத்தலின்றி வாளாவிருத்தலின் உட்காரணம்
யாதெனஒருவாறு ஊகிக்கலாம். "நானுந்தான்நல்லனாய்

வாழ்கின்றேன்; நானென்ன, குடிக்கின்றேனா, திருடுகின்றேனா, வேசிபரை விரும்புகின்றேனா'' என்பனபோன்ற எண்ணங்கள் எழுவதால் அவன்பால் விபத்தற்குரிய சிறப்பொன்றும் இல்லையேபோல் இவனுக்குத் தோன்றுகின்றதுபோலும். ஆயினும், மனச் சான்றென்பதொன்று இமைபளவும் அவனை விட்டகலாமல் உட்கார்ந்துகொண்டிருக்கின்றதே. அது,'' நீயும் நல்லனோ! கேள். இன்றைக்கே நீ சொல்லிய பொய் இத்தனை. வீட்டினுள் நுழையும்போது பக்கத்துவீட்டுவாயிலில் நின்றவோர் மோட்டார்வண்டியைப்பார்த்து நெட்டுயிர்ப்பு வீங்கினாயே. போதிய வருவாயிருந்தும் அதனை வீண் செலவுசெய்து அவசியமாய் வேண்டியவைகளுக்குக் கடன்பட்டிருக்கின்றாயே. உன் மகனுக்கு வேலையாகும்பொருட்டுக் கொடுத்த இலஞ்சத்தை மறந்தனையோ! வழியிலே இன்னொருவன் உனக்கு வந்தனம் செய்யவில்லையென்று நீ எய்திய சினம் இன்னும் மாறவில்லையே. நல்லது; நீ உன் அண்ணனுடன் பேசி எத்தனை நாட்களாயின. செருப்பிற்கு மெருகு சிறிது குறைந்திருக்கின்றதென்று உன் வேலைக்காரனை இன்று காலையில் வாயில்வந்தவாறெல்லாம் வைதவனும் நீ அல்லையோ? நீவர்த்தமானப்பத்திரிகையைப் பார்த்துக் கொண்டிருந்தபோது கூவியதற்காக உன் சிறுவனைப் புடைத்த கைகள் இன்னும் ஆறவில்லையே. உனக்கு உபகாரங்கள் சில செய்திருக்குமொருவன், தன் மகளது விவாகத்திற்கு உன் வீட்டை இரண்டொரு நாள் உதவும்படி வேண்ட, நீ மறுத்துவிட்ட மேன்மையை என்னென்றுரைப்பது!........இத்தனைக்கும் இடையே, நீயும் நல்லன் என்று நினைத்துக்கொள்கின்றாயே. இதற்கெல்லாம் எதிராக, நீ உண்மையாக உன் இலாபத்தைக் கருதாமல் செய்த நன்மை ஒன்றேனும் நினைத்துச்சொல், பார்ப்போம்'' என்று இரக்கமின்றி இடித்துரைக்காமல், 'நமக்கென்ன' எனச் சும்மா விருப்பதில்லை. இப்பொழுது எப்படித் தப்புவான் என்னிலோ, குருட்டு வழிகள் இரண்டு இருக்கின்றன: "இந்தக் குற்றங்கள் கூட அற்றவனாக யாரால் இருக்க இயலும்.........எல்லோரும் என்னளவு நல்லவர்களாயிருந்தாற்போதும்'' என்றவோர் புல்லிய பெருமிதத்தால் அம்மனச்சாக்ஷியின் வாயை அடக்க முயலுதல் ஒன்று. மற்றது, "நல்லவர் நல்லவர் என்று பேரெடுத்தவர்கள்தம் வாழ்க்கையின் உள் நுழைந்து பார்த்தால் இதனிலுங் கேடாயிருக்கும்'' என்ற பொல்லாப்பழியுடைய நினைவாகும். இது எவ்வாறாயினும், நமக்கு வேண்டிய இரகசியத்தின் உண்மை இப்பொழுது இவன் வாய்நின்றே கிடைத்து விட்டது—நல்லனாயிருக்க யாவனாலும் இயலாது என்பதை இவனே இறுதியில் ஒத்துக்கொள்கின்றானன்றோ!

ஆம்! சலசலப்பும் விதிர்விதிர்ப்பும் இன்றி நல்லனாய் அமர்ந்து வாழ்தலே யாதினும் அரியதாம். அவ்வாறு வாழ்வதற்கு மேன்மேலும் முயன்று வரலாமேயன்றி அம்முயற்சி முற்றியதென்றுன்னுவது ஒருபோதுமில்லை. இச்செவ்வியில், ராபர்ட் லூயி ஸ்டீவன்ஸன் (Robert Louis Stevenson) என்னும் ஆங்கிலக் கட்டுரையாளர் ஒருவர் எம் நினைவிற்குவருகின்றார். பின்வரும் அவர் வாக்கியங்கள் இங்குப்பொருத்தமுடையனவாகும் :—

To be honest, to be kind,—to earn a little and to spend a little less, to make upon the whole a family happier for his presence, to renounce when that shall be necessary and not be embittered, to keep a few friends but these without capitulation—above all, on the same grim condition; to keep friends with himself—here is a task for all that a man has of fortitude and delicacy. He has an ambitious soul who would ask more; he has a hopeful spirit who should look in such an enterprise to be successful. There is indeed one element in human destiny that not blindness itself can controvert: Whatever else we are intended to do, we are not intended to succeed: Failure is the fate allotted. It is so in every art and study; it is so in the continent art of living well.

[யோக்கியமாயும் பக்ஷமாயும் இருந்து—ஏதோ சிறிது சம்பாதித்து, அதனிற் சிறிது குறையச் செலவுசெய்து—தான் இருப்பதால் ஒரு குடும்பத்தின் சந்தோஷ மதிகரிப்பதாக்கி—அவசியம் நேரும்போது மனம் கைக்காமல் துறந்து—மிகச் சில நண்பர்களை, அவர்க்கும் அடிமையாகாமல், உடையனாய், வன்மமுடைய அதே நிபந்தனையின்படி தனக்குத்தானேயும் இடையறா நட்பினனாய் வாழ்வானாயின், திட்பமும் நுட்பமும் உடைய ஒருவனுக்கு வேண்டிய அளவு வேலை இதோ இருக்கின்றது. இதற்கு மேல் ஒன்று கேட்பவன் பேராசைக்காரன்; இந்தக் காரியத்தைச் சாதித்துவிடலாம் என்று எதிர்பார்ப்பவன் எதனையும் எளிதில் நம்பிவிடுகின்ற தன்மையன் ஆதல்வேண்டும். மனிதனுடைய தலையெழுத்தில் குருடனுங்கூட மறுக்கமாட்டாத அம்சமொன்றிருக்கின்றது உண்மை: நம்மைப் படைத்திருப்பதன் நோக்கம் வேறெதுவாயினும் ஆகுக—எதனிலும் முற்றிய வெற்றியராவது அந்நோக்கத்தி லொன்றன்று. முற்றுமற் றவறிவிடுதலே நமக்கு அளித்த விதியாகும். ஒவ்வொரு கலையிலும் ஒவ்வொரு கல்வியிலும் இவ்வண்ணமே: அதனினும், நன்றாக வாழ்வதெனும் கலையிலும் நம் விதி இப்படியேதான்.]

தன்னையே நம்பிய தாளாண்மையின் செய்தி இவ்வித விதியினால் அவலமாம் என்பது உண்மையே. கடவுளை நம்பி வாழ்க்கையெனும் கலையைப் பயின்றாற்றினால் ராபர்ட் லூயி ஸ்டீவென்ஸனைப்போல் கையற்றுச் சோரவேண்டா. எனினும், நல்லவரென்ற நாமத்திற் குரியவராய் அல்லலின்றி அமைதியுடன் வாழ்வது எத்துணைக் கடினமென்பதை இவ்வாக்கியங்கள் சிறக்கக்காட்டுவதனால் இவைகளை இங்கே எழுதினோம்.

இதனால், தங்கிய துயரத்தால் தொங்குந் தலையுடன் யாவருங் கிடக்கவேண்டுவதே கடன் எனக் கழறுதல் எம்கருத்தன்று. வெற்றி வாய்க்குமோ இல்லையோ என்பதனைக் கணித்தலின்றிக் கருமங்களை ஆற்றினால், முற்றுறாக் காலையில் மாபெருந்துயரம் மூண்டு மனிதனை அழித்திடாதென்னும் நினைவையே வற்புறுத்துகின்றோம். கருமங் கெட்டவிடத்தும் எண்ணஞ் சிதையாதாதலின் மன வமைதி மாறாது நிலைத்திருக்கும். மனவமைதி மாறிய வாழ்க்கையில் சுவையுமில்லை ஒளியுமில்லை. இவையிரண்டும் இழந்தபின் எஞ்சிய எதனாலும் எந்நலமும் எய்தவேனும் இயற்றவேனும் இயலாது. செய்வதே கடனென்றும் அதன்பயன் சேர்வது தம் செயலன்றென்றுஞ் சிந்தித்திருப்பார்க்குத் தோல்வியென்பது எந்நாளுமில்லை. தோல்விபோல் தோன்றுமதனையும் வீரமொடு தாங்குவார் வெல்லும் ஆற்றலினும் தோல்விக்குத் தளராத வீரமே பெரிது. ஏனெனில் இவர் அத்தோல்வியையும் வென்றவொரு வீரராகின்றார். வெல்வதில்லை என்னும் மெய்யறிவினாற்றான் தோல்வியைப் புறங்காண இயலுமாதலின், ராபர்ட் லூயி ஸ்டீவென்ஸன் இன்றியமையா அம்மூதறிவை இப்படி இனிதின் விளக்க முயன்றனர் என்று இயம்புதல் வேண்டும்.

[library stamp]



# நவராத்திரி

## [ஓர் நாடகம்]

[527-வது பக்கத் தொடர்ச்சி]

உரு :—துலுக்கனுக்குக் குழந்தைமேலா கண்? அந்தப் பெண்மே லல்லவோ—பேரென்ன, சுபத்திரையா? அவளை அடித்துக்கொண்டு போய்விட்டான் — பின் ஏன் இந்தப்பங்களாவில் அலைந்துகொண்டிருக்கிறான்—ஏதோ கட்சிக்காரன் வக்கீலையரைப் பார்க்கப்போவது போல் வந்து மூட்டைகளும் முடிச்சுமாய் வீட்டிலிறங்கி......தெரியாதா—குட்டு—நான் போய், போலீசாரிடம் முறையிட்டேனும்—அந்தப்பெண்ணைச் சிறை மீட்டவேண்டும்! (விரைந்தோடி வருகிறான்).

தியா :—வா, என்னை எடுத்தேகு—கையில்விலங்கு மாட்டவா ஓடிவருகிறாய்?—வா, இந்தா, கைகள்!

காமா :-சிறை என்றால் பயமேது-இருதரம். தொண்டர் படைஞனாய் ஒருதரம்—கட்குடி மறியலில் மறுதரம்—சிறை எனின் குணங்கன் சிணுங்குவானா—ஆனால் இவனைச் சிறையிலடைத்தால், நாம் குஞ்சுவைக் காணுவதெங்கே!......... இரு—உருமபிள்ளை —பதட்டப்படாதே!

துரை :—சாந்தம்! சாந்தம் சாக! பதறிப் பாழ்க் கேல்!

உரு :—போய் நான் பெட்ரோல் டப்பாவைக் கொணர்கிறேன்—பயல் ஓடுவதாயிருந்தால், சாமியாரே, கண்ணைத் திறவுங்கள்—உமது கைத்திறனைக் காட்டு!

காமா :—அந்தப்பொம்மையை எடுத்துத்தாயேன்!

தியா :—கொலுவறையிலே எத்தனையோ இருக்க—இவனை வேண்டுவானேன்.

காமா :—அவை பழைய பொம்மைகள். புதிதே பகட்டிப் பசப்பும். உருமபிள்ளை! அதுபோன்றது உலகிலேயே வேறு கிடைப்பதரிதா? வேளைக்கு உதவு வா, அந்தப்பொம்மையைக் கொடு—நீ கேட்கிற விலை தருகிறேன், இனமாக வேண்டாம்!

உரு :—(ஓடிக்கொண்டே) விலை நாலுரூபாய்—எனக்கு அவசரம்-சாமியாரே போய்எடுத்துக்கொள்ளட்டும்

[லாயப் பாதையில் மறைகிறான்]

காமா :—நான் எடுத்துவருகிறேன், நீர் இரும்!

தியா:—என்ன மரியாதை வைக்கிறாள் சாமியார்க்கு. அதிலிருந்தேதெரிகிறதே இவர்கருதும் மறைகருமம்!

காமா:—உன்னைச் சிறையடைக்கும் அவசரம் அவனுக்கு—சேப்புக்காகிதமா? (மறைகையில்)

துரை :—நானே போகிறேன்- உங்களுக்குத் தெரியாது—(இறங்கி இடப்புறத்தில் மறைகிறான்)

தியா:—இதே நற்சமயம்—(செடியில் மாட்டியிருக்கும் உருமபிள்ளை மேலங்கியை எடுத்து,) நிச்சயம் அதே!—தையற்காரர்—கன்னையா செட்டி, சென்னை. C R T. என்றும் வண்ணான் குறி—நல்லவேளை- கடியாரத்தையும் பார்க்கிறேன்....West End! அவனதுதானே - பின்னால் பெயரும் - பொறித்திருந்தானே, மாமனார் அன்பளிப்பு என்று—ஆம் (படிக்கிறான்) வேணுகோபால்!—(மீண்டும் மாட்டிவிடுகையில்)

காமுகுரல் :—குல்லாவை எடுக்கிறான் — ஓட்டம் பிடிக்க! சாமியாரே!

துரை :—(ஓடோடிவந்து) வந்தேன்—பிடித்தேன்...

தியா:—(சிறித்துக் கொண்டு) வந்தேன்-நானும் பிடித்தேன்!

துரை:—யாரை? என்னையா?

தியா:—திருடனை!

துரை:—நீயன்றோ திருடன்! (பிடிக்கப் போகையில்)

[உருமபிள்ளை லாயப்பாதையில் ஓடிவருகிறான்]

உரு:—ஓடப்பார்த்தானா?

தியா:—ஆம்; இதோ பிடித்திருக்கிறேன் விடாமல்!

காமா:—உருமபிள்ளை, பார்த்துக்கொள்வான்; நீங்கள் வாருங்கள் நாற்காலிக்கு; இதை மந்திரிக்கவேண்டும்;பின் மூலிகை தேடி எனக்கு வேறு-

துரை:—(பிடியை விட்டு) இந்தாப்பா!

உரு:—வருகிறேன் என்றாயே—வருகிறாயா நீயே... ஏறுவண்டியில்!

[பெட்ரோல் டப்பாவுடன் இடப்புறத்தில் மறைய]

தியா:—உனக்காகத்தான் ஏறு! எண்ணெயை ஊற்று முதலில்.

துரை:—இதோ முதலில் இந்த விபூதியை வாயிற் சுவையுங்கள்!

தியா:—பேத்தி உடலில் இது போய்த் தாக்கிடப் பாட்டி மருந்து அருந்துகிறாளா? தியாகமே தியாகம்!

காமா:— (வாங்கிக்கொண்டு) உனக்கு நம்பிக்கையில்லாவிடின் எங்களை ஏசுவானேன்? அந்த விபூதியை அவன்மேல் வீசி ஊமையாக்குங்கள் அவனை!

துரை:—(மேலும் கீழுமாய்த்தலையை யாட்டிக்கொண்டு) சொல்லட்டும்! நம்மை ஒன்றும் பாதிக்காது; அவன் மீதே மீண்டு பாய்ந்தடிக்கும்!

[கண்ணை மூடிக்கொண்டு மந்திரம் ஜெபிப்பதுபோல் முணுமுணுக்கிறான்]

தியா:-பல ளிப்பொழுதே தெரியப்போகிறது;உமக்கும் மோட்டார் காத்திருக்கிறது! அல்லவா?

(சிரிக்கிறான்)

உரு :— சரி, புறப்படலாம்! ஏறுகிறாயா நீ!

காமா :—உருமபிள்ளை,—முன்போல் கூவு, குஞ்சு என்று—இன்னொருதரம்! வந்துவிடுவாள்!

உரு:—என்ன,நாங்கள் மூவரும் உன்னைத் தூக்கித்தான் வைக்கவேண்டுமா வண்டியில்! குஞ்சு! குஞ்சு!

தியா :—நான் அவளை எங்கோ ஒளித்து வைத்திருக்கையில் எப்படி வருவாள், (சிரிக்க).

காமா :—ஆமாடா — மறந்தோமே! — முதலில் போலீசாரிடம் புகாரிட்டு வா! சாமியாரே எப்போவருவளோ குஞ்சு—அதற்குள் மூலிகையைப் பொறுக்க வருகிறீர்களா— இந்த அகன்ற நெடும் பங்களாத்தோட்டத்திலே இருக்காதா அந்த மூலிகை.........

உரு :—பின் அந்தப் பொம்மை எதற்கு--கொடுத்துவிடுங்கள்—நான் கையோடு வீட்டுக்கு கொண்டுபோகிறேன்!—சாந்தமாய் இவன் இசைந்து வருவான்போலில்லை, நடிப்பும் படிப்புமே!

காமா :—இந்தப் பொம்மையைத் தரமுடியாதினி--இந்தா ரூபாய் ஐந்து ! (மடியிலிருந்து எடுத்து நோட்டினை எறிய)

உரு:—(பறக்கையிலே பிடித்துக்கொண்டு) சரி—வா!

தியா :—(சிரித்துக் கொண்டு) வந்தேன், உனது சட்டையை மறக்காதே—எடுத்துக்கொள் — திருட்டை மெய்ப்பிக்க, அந்தச் சட்டையையும் கடியாரமும் வேண்டாமா? உளவுகள் அவைகளிலன்றோஉள! போட்டுக்கொள் சட்டையை !

உரு :—(பிரமித்து நின்று) நிரம்பவேர்வையுமாயிருக்கிறது; அந்தச் சட்டை வேண்டாம்! நீ ஏறு, வா! சரி—கடியாரமேனும வேண்டாமா - ஐந்து நிமிஷத்துக்கொருதரம் காலம் பறந்து அகல் அறியவேண்டிய நீ கடியாரமில்லாமில் என்ன செய்வாய்? கடியாரம்; அது வேணுகோபால் கடியாரமல்லவா ?

உரு :— (திடுக்கிட்டமுகத்துடன்) வேணுகோபால் கடியாரமா'?- என் கடியாரம்-பாரிதை !

தியா :—(சிரித்து) அடடா! வேணுகோபால் என்று பின்புறம் அச்சிட்டிருக்கும்...அப்பெயரோன் செய்த கடிகாரம் என்றேன்—இப்போ உனதுதான் (சிரிக்கிருன்)—காட்டு, வேணுகோபால் என்று எழுதியிரா விட்டால் வேறு வியாபாரிகள் செய்தது !

உரு :—நடிகாரம்-அது ஓடவில்லை, வேண்டாமது.

காமா :—வா, நீ சத்தம் போடாதே—சாமியார் நிஷ்டையைக் கலைக்கிறீர்களே...

தியா :—(தயங்கி, தனக்குள்) பயல்-கெட்டிக்காரன்-தப்பி விட்டான்...பேசும் சாதுரியம் அதிகம்.

உரு :—என்ன தயங்குகிருய் ?

தியா :—(திடுக்கென) சரி—வந்தேன் (புறப்பட]

உரு :—ஏன், என்னை ஏற இறங்கப் பார்க்கிருய் ! நான் நடுங்குவானேன் !

தியா : — நீ நடுங்குவானேன் ? (சிரிக்க)

உரு :—ஓகோ! சட்டையைப் பார்த்தா சிரிக்கிருய்? (திடுக்கென) அடடா—என்ன அழுக்கு!—வேறு மாற்றிக்கொண்டு வருகிறேன். அதற்குள் குஞ்சு வருகிருளோ பார்க்கிறேன்...குஞ்சு ! குஞ்சு ! (சட்டையை எடுத்துக்கொண்டு)

தியா:—பொன்னி குரலே - பொய்க்குரலே! பொய்யும் கபடுமே!

உரு:—அவளையும் தெரியுமா உனக்கு-எது துலுக்கன் பெரிய போக்கிரிபோலும்!......குஞ்சு!
(பொய்க்குரலில் மீண்டும் கூவிக்கொண்டே மறைகிருன்)

தியா:—அவள் ஏமாறுவளோ? வந்து விடுவளோ ?

காமா:—நீ அடைத்து வைத்திராவிட்டால் வருவாள்?

[இந்தியதேவி குஞ்சுவின் உருவில் வருகிருள்]

இந்:—நான் ஏமாறவில்லை என்று காட்டவே வந்தேன்...அன்னை எங்கே! பொய்க்குரல் தானே அது!

துரை:—இதோ இங்கிருக்கிருள் வா!

இந்:—முன்போல், பொம்மைதானே — மீண்டும் எறியேன் தெருவில்.

காமா:—அது பொம்மை - இது பொம்மையல்ல! அந்தப் பொம்மைஎங்கே? எங்கே கெட்டுப் போக்கிருய்!

இந் :—எங்கே? காண்பி !

துரை:—இதோ உனது தாய்! உன்னைப்பெற்றதாய்! வளர்த்த தாய்! பின் இறந்ததாய்—மீண்டும் வந்ததாய்!

தியா :— ஹஹா ! ஹஹா ! ரப்பர் !

இந் :—(வாங்கிக் கொண்டு) இதோ ! என் அன்னை ! ...ஹஹா ! கண் வெளுத்த—

துரை :—அதோ கண்கள்—

இந் :—காதடைத்த

துரை :—இதோ காதுகள்

இந் :—பேச்சில்லா மூச்சில்லா—

துரை :—இதோ மூக்கு!..........

இந் :—முனை துனை மூளையில்லா......

துரை:—உள்ளே மறைந்திருக்கும்—கண்ணுக்குத் தெரியுமா ?

இந் :—இதயம் துடியா—

ராஜீ :—மறைந்திருக்கிறது அதுவும்——

இந் :—கால் நடந்தியங்கா—

காமா :—அதுவு மிருக்கே—அதோ—

இந் :—கை மடிந்து செயல் எண்ண.........

மாமா :—அதோ இரு கைகள் !

இந் :— பேச்சும் பாட்டும் இசைக்கா——

துரை :— பேசுகிறதே — வயிற்றை அதுக்கினல் (அதுக்கி) கேள்—கீச்கீச் !

இந்:—வெறும் வயிறு - பசியினல் கூவும்பூனைப் புலம்பலல்லவா ?

துரை :—பார் நன்ருய்—அம்மாவே—நீ கையால் தொட்டு அதுக்கினல் - ஏனென்பாள்...... வைத்துக் கொள்,—பத்திரமாய் !

இந் :—அன்னை குரல் இப்படியா ஈனமாகி இழிந்தொலித்தது முன்னுள்...

காமா :—ஆம்—உனக்கெப்படி நினைவிருக்கும் !—கொஞ்சம் மாறியிருக்கலாம்...பப்பம் தின்றுதின்று, உன்குரல் மாறவில்லையா ?

இந் :—வாய்மட்டும் இனிக்க, வயிறு நிரப்பாத உன் சக்கரைக் கட்டிகளை எப்போ தின்னேன் நான்—இதோ...என் பழையநாள் அன்பன்னைதன் பொன் எழுத்துக்களை அழித்து வெறுமையாக்க வந்த இந்த அழிகொல்லியைத் தாக்க எறிகிறேன், மரத்தில் குருவிபோல் தொத்திக்கொள்ளும்(வானில் தூக்கிஎறிய)

காமா :—ஐயையோ—ஐந்து ரூபாய் தந்தேனடி !

துரை :—நான் மந்திரித்துத் தந்தேன்...இப்படித் தூக்கி எறிகிருயா ?

மாயா :—அந்த மரத்தில் தொத்திக் கொண்டது-கீழ்விழவில்லை; நான் ஏறி எடுத்துக்கொள்கிறேன் - நீ என்ன செய்வாயடி இப்போ—உன் கைகள் என்ன செய்யும் ?......(இடப்புறத்தில் ஓடுகிருன்)

காமா :—எடுத்துக்கொண்டுவா இங்கே !

தியா :—நான் ஒன்றுசொல்வேன்—இவளது விருப்புக்கொப்பச் செய்யும் வகை நன்றே-என்னிடம் விடுங்கள் ! அதி சீக்கிரத்தில் அவள் மனம் மகிழ்வுறும்.



# ஊழ்வினையும் ஆள்வினையும்

நாகரிகம் வாய்ந்த மக்கள் எவரோ, ஒழுக்கமுடைய மக்கள் எவரோ, கடவுள் நினைவுடைய மக்கள் எவரோ, அன்னு ரனைவரும் ஆவன கருதியே வாழ்வர். ஆவன கருதி வாழாத மகனைப் பாமர உலகமும் பரிகசிக்கும். இரந்துண்ணும் இழிதொழிலாளனும் அடுத்தவேளை உணவுக்கு நினைக்கின்ருன். ஒரு நாளுக் குணவுடையோன் மறுநாட்கும் விரும்புகின்ருன். மழைக்காலத்துக்கு வேண்டியதை வெயிற்காலத்திற் சேர்க்கிருர்கள். முதுமைக்கு வேண்டியதை இளமையில் சேர்க்கிருர்கள். இன்னபடி செய்துகொள்வதின்றித் தவறுவோன் தவிப்பதைக் காண்பதாலும், தாமும் துன்புற்றிருப்பதாலும் பெரிதும் இவைகளில் முற்படுகின்றனர். மனித அறிவு எளிதில் அறியத்தக்கன இவைகளாதலால், எளிதில் அறிந்துகொள்கின்றது. இன்னும் சிறிது நுணுகி நோக்கினல் முதுமைக்குப்பின் வரும் மரணத்திலும், அதன்பின் வரும் மறுமையிலும் ஆவன சில அறிந்துகொள்ள இயலும். அதை அறிந்துகொள்ளாமையாலேயே நாம் உலகத்தில் பல்வேறு தகுதியில் இருந்துகொண்டு பொருளிருந்து சிலரும், வறுமையிற் சிலரும், மனைவியில்லையென்று சிலரும், மகவில்லையென்று சிலரும், குச்சிவீடும் இல்லையென்று சிலரும், மச்சிவீடும் போதாதென்று சிலரும் பெரிதும் துன்புறுகின்றனர். இன்னபடி நம்மை இயக்கிவைக்கின்ற தெது? என்பதை நாம் அறியவேண்டும். இதை ஆந்திரகவி, வேமநயோகி, முற்பிறவியிலே புண்ணியம் செய்யாத பாவி பொருளுக்கு விரும்புவது எதுபோலென்ருல், “விதைக்குங்காலத்தில்மறந்துபின் அறுக்கஆசைப்பட்டுத் தேடுவதுபோலாகும்” என்றருளுகின்ருர். இத்தத்துவம் அறிந்தவாறே,இன்பம் பெறுதல் எவ்வாறுஎன்றும் துன்பத்தினின்று மீளுமாறு எவ்வாறு என்றும் ஏங்கும் நிலையெய்தும். அதனல், ஆவன கருத அவரை உந்தும். அதனோடு நம் வாழ்வு முடிந்துவிடவில்லை; மறுமையில் 'பிணைக்கப்பட்டிருக்கின்ற தென்றறிவான்; அம்மட்டோ டல்ல; பிறவியில் பிணைக்கப்பட்டிருக்கின்றதென்றும் அறிவான். அதனல், தான் இப்போது இவ்வாறு செய்யவேண்டுமென்று தெளிவான். இவ்வாறு தெளிந்த அறிஞன் தானென்றும், தன்னுடைமையென்றும் அகங்கரியான். இலை, பூ, காய், கிளை, மரம் முதலாக அடியோடு அழியச்செய்யும் ஆணிவேர்ப் புழுவே அகங்காரம் என்னலாம். அதை யொழிக்கவே ஆவன கருதவேண்டும். இன்ன பிற வெல்லா முணர்ந்த கபிலர்,

விழுச்சிறப் புடைய வூழின்
வினைவகை யறிய மாட்டான்
அழித்திடு மாசை பௌவத்
தளறெழ விழுந்து மூழ்கி
இழைத்தன னியானே யென்ன
வெண்ணிய திறத்தி னலே
தழைத்திடும் வினைகளெல்லாந்
தன்னைவந் தடையா நிற்கும் (பாகவதம்)

என்று கூறுகின்ருர். அவ்வாறு கருதற்கேற்ற பிறவியிலேயே இறைவன் நம்மைப் படைத்திருக்கின்ருன். இப்பிறவியின் உயர்வை நோக்குவோமாயின், நாம் இவ்வாறு வந்தவாறு எவ்வாறு என்று சிந்திக்கவும், தன்னோடு ஒப்பாரும் மிக்காருமில்லாத தனிபெருந் தலைவனை வணங்கவும், யார்மாட்டும் அருளொடு வாழவுமே என்பது இனிது போதரும். 'மக்கள்தாமே ஆறறிவுயிரே' என்றபடி இத்தகைய சீரிய அறிவின் பெட்டியன்றோ, இவ்வுடல். இன்னபல நற்குணத்தின் உறைவிடமான மக்களைத்தான் பல நூற்களும் வழுத்துகின்றன. இதற்கு மாறபாடுடையார் மாக்கள் எனப்படுவர். நற்குணவொளிவெள்ளத்தை உலகில் வீசிக் காட்டுதலைத் தன்னுடைமையாகக் கொண்ட பிறவி இஃதொன்றே. அதனுலேயே வளையாபதியும்,

வினைபல வலியி னலே
வேறுவே றியாக்கை யாகி
நனிபல பிறவி தம்முட்
டுன்புறூஉம் பல்லு யிர்க்கும்
மனிதரி னரிய தாகும்
தோன்றுதற் றென்றி னலும்
இனியவை நுகர வெய்தும்
செல்வமு முள்ள தேயாம்.
உயர்குடி நனியுட் டோன்ற
லூனமி லியாக்கை யாதல்
மயர்வறு கல்வி கேள்வி
தன்மையால் வல்ல ராதல்
பெரிதுணர் வறிவே யாதல்
பேரறங் கோட லென்றுங்
கரிதிவை பெறுத லோடா
பெற்றவர் மக்க ளென்பார்.

என்று புகல்கின்றது. மனித இற்கையாம் உயர்குணங் களைப் பாழிலே உகுத்துத் தக்கவின்ன தாகாதன வின்ன வென்று வொக்க வுன்னுது 'செய்தக்க அல்ல செய்து கெடும்' தான்றேனறிகளை யெண்ணினல் தக்கார் மனம் புண்படாது என்னும்? விதிவிலக்கின்றித்திரிவன விலங்குகளே. மக்களும் அவ்வாருயின், 'விலங்கொடு மக்களனையரே'. விதிவிலக் கறியும் மனித இயற்கையின் பண்புவாய்ந்த மகன் மனம்சென்ற வழியெல்லாம் செல்லமாட்டான். 'மனம்போனபோக்கெல்லாம் போகவேண்டா' என்பது முதியோர் வாக்கன்றே.மனம் ஓர்நிலை யுடையதன்று.புத்தியால் நடைபெறுவது இதைக் 'கடோப நிடதம்' 'உடல்அழகிய சித்திரத்தோடமைந்து இரதமாகும் ; அதனிடை வீற்றிருக்கும் தலைவன் (நாம்) ஆன்மா. அவ்விரதத்தில் பூட்டியிருக்கும் குதிரைகள் ஐம்பொறிகளாகும் ; அதன் வாயில் மாட்டியிருக்குங் கடிவாளக் கயிறு மனமாகும் ; அதைக் கையில் பற்றிக்கொண்டு பொறியாங்குதிரைகள் சஞ்சரிக்கும் இடமாம் விஷயாந்தரங்களில் செல்வுழி விடாது நல்வழி திருத்தும் சாரதியாயிருப்பது புத்தி' என்று உருவகப் படுத்துகின்றது. புத்தியின் வன்மையாலேதான் இவ்விரதம் நன்குநடைபெறுதல் வேண்டும். விஷயாந்தரங்களில் புகுந்தால் பாபபுண்ணியங்கள் பலிக்கும்.அதினின்றும் மீண்டுவருதல் மிகக் கடுமை. இப் பாபபுண்யங்களாம் கர்மத்தினின்று மீளமுடியாமல் பிரம்மாவாகும் குயவன் பிரம்மாண்டமாகின்ற பாத்திரத்தைச் செய்துகொண்டே இருக்கின்ருன்.விஷ்ணுவானவர் கர்மத்தில் கட்டுப்பட்டவரன்று. காமம் அவரை ஒன்றுஞ் செய்யாது.அதனுலேயே'கடவுள்' என்றும் 'கந்தழி' என்றும் அவர்க்குப்

பெயர். அவர் எடுக்கும் அவதாரங்கள் கர்மத்தாலல்ல, தம்மிச்சையாலாகும். இவ்வுண்மையைக் கீதையிலே கண்ணன் 'நமாம் கர்மாணிலிம்பந்தி நமே கர்ம பலேஸ்ப்ருஹா' என்று கூறுகிறார். அதாவது, கர்மம் என்னைப் பந்திக்காது; கர்மத்தின் பலனை நான் அனுபவிப்பதுமில்லை' என்றாராதலால், இவ்விடத்தில் விஷ்ணுவையும் சேர்த்துச் சொன்னது கர்மத்தின் வன்மையைக் காட்டுதற்கு. இதுபோலவே ஊழிற் சம்பந்தப்படுத்தி ஸ்ரீ ராமபிரானைக் குறிக்குமிடத்திலேயும், பொருள் கொள்க. பிறவிடங்களிலேயும் இவ்வாறே. விஷ்ணுவும், பத்தவதாரமாகின்ற துன்பத்தினின்றும் மீண்டிலர். சிவபெருமானும், ஓடு கையில்கொண்டு இரந்து உண்கின்றார். கதிரவனும், நாடோறும் ககனத்தூடே வரப்பெறுகின்றான். வாயுவும் வானத்தில்ஓயாது உலவுகின்றது. கர்மத்தின் வன்மை இன்ன பிற வுடையதென்று, பர்த்ருஹரியார் அதற்கு வந்தனம் அளிக்கின்றார். இத்தகைய வன்மையுள்ள கன்மம் எதெதன் மூலமாய் நடக்கின்றதோ அந்த உளம், உரை, உடல்மூன்றையும் ஒழுக்கமுறையில் பழக்க முயலவேண்டும். இம்மூன்றினால் இயற்றும் நல்லனவே 'முத்தவங்கள்' என்று கீதாசார்யன் அருளினான். 'கேசவனை ஆராதிக்கும் முப்பூசை' யென்று பாரதம் பகர்கின்றது. இவ்மூவிடத் துறையும் தலைசிறந்த நற்குணங்களாம் 'எட்டும்' இறைவனை அர்ச்சிக்கும் மணமலர்களென்று, அதுவே அறைகின்றது. இம்மூவிடத்தால் செய்கின்ற வினைகளே 'கன்மம்' என்றுசொல்லப்படும். அக்கர்மம் சஞ்சிதம், ப்ராப்தம், ஆகாமியமென்னு மூன்றுபடிப் பட்டிருக்கின்றன. சஞ்சிதமாவது இன்றையவரையிலும் செய்த நல்வினை தீவினைத் தொகுதியாம். பிராரப்தமாவது—இப்பிறவிக்கென்றுசஞ்சிதத்தினின்றும் எடுத்துக்கொண்ட பகுதியாகும். ஆகாமியமாவது (க்ரியமாணம் என்று சொல்லப்படும்) இப்பிறவியில் செய்துகொண்டிருக்கும் விகுதியாகும். இது எதுபோலென்றால், களஞ்சியத்திலிருக்கும் நெல்லை ஒக்கும்சஞ்சிதம். உணவுக்கென்று எடுத்துக்கொண்ட நெல்லை ஒக்கும் பிராரப்தம். பயிராயிருப்ப தொக்கும் ஆகாமியம். நாம் ஓர் பயிர் செய்வோமானால் விளைந்ததும் களஞ்சியத்தில் சேர்க்கின்றோம். அதினின்றும் அவ்வருடத்துக்கு வேண்டியதானியம் புசிப்புக்கெடுத்துக் கொள்ளுகின்றோம். பின்னரும் பயிர்செய்துகொண்டிருக்கின்றோம். இதனால் பல ஆண்டுகள் உண்ணவேண்டிய தானியம் களஞ்சியத்தில் இருக்கின்றது. மேலும் பயிர் விளைந்தவாறே அத்தானியத்தையும் அதில் சேர்க்கின்றோம். இவ்வாறு நடைபெறுவதுதான் கர்மகதி. இவைகளைத்தான் 'கன்மம்—வினை' யென்று கூறுவது. வினையிருக்கும்வரையில் இன்ப துன்பங்கள், பாவபுண்யங்கள், இறப்புப் பிறப்பு இருந்துகொண்டே இருக்கும். வினையொழிக்கவே அறிஞர்கள் முயன்றார்கள். எனினும், வினையை ஒழித்து இருக்க எவராலும் இயலாது.

தோலாமொழித்தேவர் இயற்றிய

# சூளாமணி

[525-வதுபக்கத் தொடர்ச்சி]

5. மந்திரசாலைச் சருக்கம்

275. கொற்றவேன் மன்னர்க் கோதுங்
குணமெலாங் குழுமி வந்து
முற்றுநின் றுருவு கொண்ட
மூர்த்திநின் முன்னர் யாங்கள்
இற்றென வுரைக்கு நீதி
ஓதுநூ லெல்லை காணக்
கற்றவர் முன்னை யேனோர்
கதையொத்துக் காட்டு மன்றே. 38.

கொற்றம் வேல் மன்னர்க்கு - வெற்றி வேலையுடைய அரசர்களுக்கு, ஓதும் - (இன்றியமையாதனவென்று) சொல்லப்படும், குணம் எல்லாம் குழுமிவந்து - குணங்களெல்லாம் ஒருங்குசேர்ந்து, முற்றும் நின்று - முற்றப்பொருந்தி, உருவுகொண்ட - உருவெடுத்தாற் போன்ற, மூர்த்தி - மூர்த்தியே, நின்முன்னர் - உனது முன்னிலையில், யாங்கள் இற்று என உரைக்கும் நீதி - இதுதான் செய்யத்தக்கதென்று யாங்கள் சொல்லப்புகுந்தன்மை, ஓது நூல் எல்லைகாண கற்றவர் முன்னை - கற்கவேண்டிய நூல்களையெல்லாம் கற்று வரம்புகண்டு உணர்ந்த அறிஞர் முன்னிலையில், ஏனோர் கதை - கற்றறியாதவர் பேசுதலை, ஒத்துக்காட்டும் - போல்வதாகும், அன்றே - அல்லவா ?

நீதி - பெற்றி, தன்மை. கதை - கதைத்தல், சொல்லல், பேசுதல்.

276. தேன்மகிழ் தெரிய லாய்நின்
திருக்குலந் தெளிப்ப வந்த
பான்மகிழ்ந் தனைய தீஞ்சொற்
பவளவாய்ப் பரவை யல்குல்
வான்மகிழ் மணங்கொண் மேனி
யணங்கினுக் குரிய கோனை
யான்மகிழ்ந் துணர்த்தக் கேட்பின்
இடைசிறி தருளு கென்றான். 39.

தேன் மகிழ் - வண்டுகள் தேனையுண்டு மகிழும், தெரியலாய்-பூமாலையை அணிந்த மன்னனே, நின் திருகுலம் - உனது உயர்ந்த குலம், தெளிப்ப - ஒளிபெற்று விளங்க, வந்த - தோன்றிய, பால் மகிழ்ந்து அனைய - பால் மகிழச்செய்வது போன்ற, தீம் சொல்- இனிய சொற்களைப் பேசும், பவளம்வாய் - பவளத்தைப்போலச் செவந்த வாயினையும், பரவை அல்குல்- பரந்த அல்குலையும், வான்மகிழ் மணம்கொள் மேனி- இனியதாய் வானெங்கும் பரந்த நறுமணத்தைக்கொண்ட மேனியையும் உடைய, அணங்கினுக்கு உரிய கோனை - உன்மகளுக்குக் கணவனுவதற்கு ஏற்ற அரசனை, யான் மகிழ்ந்து உணர்த்த கேட்பின் - யான் மனமுவந்து சொல்வதை நீ கேட்கவிரும்புவையாயின், இடை சிறிது அருளுக - எனக்குச் சற்று இடம் கொடுத்தருளுவாயாக, என்றான் - என்று சொல்லத் தொடங்கினான்.



தெளிப்ப - ஒளிர, விளங்க; தெளி - ஒளி. பரவை - பரப்பு, அகற்சி. இடை - இடம், அவகாசம். அருளுகென்றான் - அருளுக என்றான், (விகாரம்).

வேறு

277. மஞ்சிவர் மால்வரைச் சென்னி வடமலை
விஞ்சையர் வாழும் விழாவணி நல்லுல
கஞ்சியல் வில்லோய் அதுமற் றமரர்கள்
துஞ்சிய லில்லாத் துறக்கம் அனையதே. 40.

அஞ்சு இயல் வில்லோய் - பகைவர் அஞ்சும் இயல்பினையுடைய வில்லோய், மஞ்சு இவர் மால்வரை சென்னிவடமலை-மேகங்கள் உலாவும் பெரியமலையின் உச்சியிலுள்ள வடமலை, விஞ்சையர் வாழும் விழா அணி நல்லுலகு - வித்தியாதரர்கள் வாழும் திருவிழாவுடன் (என்றும்) பொலியும் நல்ல உலகமாகும். அது:— துஞ்சு இயல்இல்லா அமரர்கள் துறக்கம்-சாகாத் தன்மையராகிய தேவர்களின் துறக்க நாட்டை, அனையது- ஒத்தது.

278. மண்ணியல் வாழ்நர்க்கு வானுல கொப்பது
புண்ணிய மில்லார் புகுதற் கரியது
கண்ணிய கற்பகக் கானங் கலந்தது
விண்ணிய லின்பம் விரவிற் றினியதே. 41.

வாழ்நர்க்கு - இங்கே வாழ்பவர்க்கு, மண் இயல் வானுலகு ஒப்பது - மண்ணுலகில் உள்ளதொரு விண்ணுலகத்தைப் போன்று தோன்றுவது ; புண்ணியம் இல்லார் புகுவதற்கு அரியது - நல்வினையைச் செய்யாதவர்கள் அணுகுவதற்கும் அரியது; கண்ணிய- சிறந்த, கற்பகம் கானம் கலந்தது-கற்பகச் சோலைகள் பொருந்தியது; விண் இயல் இன்பம் விரவிற்று - சொர்க்கலோக போகங்கள் எல்லாம் நிரம்பியது ; இனியது - எல்லாவகையாலும் இனியது.

கண்ணியம் - பெருமை, சிறப்பு.

279. எல்லா விருதுவும் ஈனும் பொழிலின
தெல்லா நிதியும் இயன்ற விடத்தின
தெல்லா வமரர் கணமு மிராப்பகல்
எல்லாப் புலமு நுகர்தற் கேற்றதே 42.

எல்லா இருதுவும் - எல்லாப்பருவங்களிலும், ஈனும் - பழங்களைத் தரும், பொழிலினது - சோலைகளை உடையது; எல்லா நிதியும் இயன்ற இடத்தினது-எல்லாச் செல்வங்களும் பொருந்திய இடங்களை உடையது ; எல்லா அமரர் கணமும் -பதினெட்டு தேவ கணங்களும், இராப்பகல் - இரவினும் பகலினும், எல்லாப்புலமும் - ஐம்புல இன்பங்களையும், நுகர்தற்கு ஏற்றது - அனுபவிக்கத் தக்கது.

280. பொன்னிதழ்த் தாமரை
பொய்கையுட் பூப்பன ;
பொன்னிதழ்த் தாமம்
பொழில்வா யவிழ்ப்பன ;
பொன்னிதழ்த் தாது
மணிநிலம் போர்ப்பன ;
பொன்னிதழ்த் தாது
துகளாய்ப் பொலிவன. 43.

பொய்கையுள் பூப்பன பொன்னிதழ் தாமரை - அங்கே, தடாகங்களில் பூக்கும் மலர்கள் பொன்மயமான இதழ்களையுடைய தாமரை; பொழில்வாய் அவிழ்ப்பன-பொழில்களில் மலர்வன, பொன் இதழ் தாமம் - பொன்மயமான இதழ்களையுடைய பூக்கள்; நிலம் போர்ப்பன - தரையை மூடிக்கொண்டு கிடப்பன, பொன் தாது மணி - பொன்னும் மணிகளும் ; துகளாய் பொலிவன- தூசிபாய்ப்பரப்பன, பொன் இதழ் தாது-பொன்னிறமான மலரின் மகரந்தம்.

தாமம் - பூ. மூன்றாவது 'இதழ்' பொருட்பயப்பின்றி எதுகை நோக்கி வந்தது. தாது - (1) உலோகம், metal ; (2) மகரந்தம் ; flower dust.

281. கானங்க ளாவன கற்பகம் காமுகர்
தானங்க ளாவன சந்தனத் தாழ்பொழில்
நானங்க ளாவன நாவி நறுவிரை
வானங்க ளாம்வகை மற்று மொன்றுண்டோ. 44.

கானங்கள் ஆவன கற்பகம் - அங்கே, சோலைகளாய் வளர்ந்திருப்பவை கற்பக மரங்களே; காமுகர் தானங்கள் ஆவன - காமிகளாகிய இளைஞர் (மங்கையருடன் கூடி விளையாடும்) இடங்கள், சந்தனம் தாழ்பொழில்- சந்தனமரக்கிளைகள் தாழ்ந்தடர்ந்த சோலைகளே; நானங்கள் ஆவன - யாவரும் உபயோகிக்கும் வாசனைப் பொருள்களாவன, நாவி நறுவிரை - கஸ்தூரிகூட்டிய நல்ல கலவைச்சாந்தே. வானங்கள் ஆம் வகை - தேவலோக போகங்கள் என்பவை, மற்றும் ஒன்று உண்டோ - இவற்றைத் தவிர்த்து வேறொன்று உண்டோ ?

நானம் - வாசனைத் தயிலமுமாம்.

282. வணிக்கப் படாத மண்டபஞ் செம்பொன்
குணிக்கப் படாத குளிர்புன னீத்தம்
கணிக்கப் படாத கதிர்மணிக் குன்றம்
பிணிக்கப் படாத வாய்மையைப் பேற்றால். 45.

வணிக்கப்படாத செம்பொன் மண்டபம் - புனைந்துரைக்க முடியாத செம்பொன்னால் வேய்ந்த மண்டபங்களும், குணிக்கப்படாத குளிர் புனல் நீத்தம் - மனதால் கருதவுமுடியாத குளிர்ச்சி பொருந்திய நீர் நிலைகளும், கணிக்கப்படாத கதிர்மணிகுன்றம் - கணக்கிட முடியாத ஒளியை வீசும் மணிகளிழைத்துச் செய்த குன்றுகளும், வாய்மைப் பேற்றால் - வாக்குவன்மையைக்கொண்டு புகழப்புகின், பிணிக்கப்படாத - கட்டுக்கு அடங்காதன.

வணிக்க - வண்ணிக்க, வர்ணிக்க. நீத்தம்-(ஆகுபெயர்) நீர்நிலை. குன்றம் - செய்குன்று. வாய்மையை; ஐ, சாரியை.

'மணிக்கற் பட்டாரண மண்டபம்' என்ற பாடத்தின் பொருள் தெளிவதற்கில்லை. 'பிணிக்கப்படாதவர்' என்ற பாடத்துக்கு: அவ்வுலகத்தி லுள்ளவர்களின் செல்வபோகங்கள் சொல்லுக் கடங்காதன என்றுரைக்க. முதல் மூன்றடிகளிலும் 'படாத' என்பதைப் பெயரெச்சமாகக் கொள்ளாது வினைமுற்றாகக் கொள்ளினும் அமையும்.

283. ஆங்கதன் மேல வறுபது மாநகர்
தீங்கதிர் மண்டிலஞ் சேர்ந்து திளைப்பன
நீங்கரு மாநகர் தம்மு ணிலாவிரித்
தோங்கிய சூளா மணியி னொளிர்வது. 46.

தீம்கதிர் மண்டிலம் சேர்ந்து-சந்திரமண்டலத்தைச் சார்ந்து, திளேப்பன-ஒளிபெற்று விளங்குவன வாகிய, அறுபது மாநகர்-அறுபது பெரிய நகரங்கள், அதன் மேல - அந்த வடமலேயின்மேல்உள்ளன; நீங்க அரும் மா நகர் தம்முள் - அவற்றையுற்ருர் விட்டுப் பிரிய மாட்டாத அந்த நகரங்களுள், சூளாமணியின்-சூளா மணியைப்போல, நிலாவிரிந்து ஒளிர்வது - பிரகாசத் தோடு கூடி விளங்குவதும்.

சூளாமணி - சூடாமணி, தலேயில் மயிர்முடியின் மேல் அணியும் இரத்தினம்.

——

284\. மரத்தினு மண்ணினும் மாடங்கள் யாவும்
திருத்தின வில்லது செம்பொ னுலகிற்
புரத்தினே வெல்வது பொன்னகர் பூந்தண்
இரத்தின பல்லவ மென்பதொன் றுண்டே. 47.

மாடங்கள்-மாளிகைகள்,யாவும்-ஒன்றேனும், மரத்தினும்மண்ணினும்திருத்தின இல்லது-மரத்தாலும் மண்ணலும்கட்டப்பட்டவைகள்இல்லாததும்,செம்பொன் புரத்தினே வெல்வது-பொன்னுலகத்திலுள்ள அமராவதியை(அழகாலுஞ் செல்வத்தாலும்)வெல்லத்தக்கதும் ஆகிய, பூந்தண் இரத்தினபல்லவம் - அழகிய குளிர்ந்த 'இரத்தினபல்லவம்' என்னும் பெயரையுடைய, பொன்னகர் ஒன்று உண்டு - பொன்மயமான நகரம் ஒன்று உண்டு.

——

285\. வளேத்தகை மங்கையர் மைந்தரொ டாடி
முளேத்தெழு காமம் முடிவில ராகித்
திளேத்தலி னன்னகர் தெய்வ வுலகம்
களித்திழிந் தன்னதொர் கவ்வை யுடைத்தே.48

வளேத்த கை - (நாயகரைத்) தழுவியகையினராகிய, மங்கையர் -பெண்கள், மைந்தரொடு ஆடி - ஆடவருடன் கூடி, முளேத்து எழுகாமம் - உள்ளெழுங்காம வேட்கை, முடிவிலர் ஆகி திளேத்தலின் - தீராதவராகி இடைவிடாது அனுபவித்தலின், அ நகர் - அந்த நகரம், தெய்வ உலகம் - சொர்க்கமே, இழிந்து - இவ்வுலகத்தில் இறங்கி, களித்தது ஓர் கவ்வை உடைத்து-களித்து மகிழ்ந்து காமவிழாக் கொண்டாடினுற்போன்றதொரு ஆரவாரத்தை உடையது.

வளேத்த கை - வளேகளே யணிந்தகை என்றுமாம்; வளே தகை எனப்பிரித்து வளேகளின் அழகைக்கொண்ட, என்று உரைப்பினும் அமையும். கவ்வை- ஒலி, ஆரவாரம்.

# யாப்பிலக்கணம்

## செய்யுள்—வெண்பா.

[535-வது பக்கத் தொடர்ச்சி]

செப்பலோசை அகவலோசை துள்ளலோசை தூங்கலோசை என்னுமந் நால்வகை ஓசைகளுக்கேற்ற படி செய்யுள்களும் நான்கு வகை அமைப்புடையவனவாகும். அவைதாம், வெண்பா ஆசிரியப்பா கலிப்பா வஞ்சிப்பா, என்பன. இவைகளில், வெண்பா செப்பலோசையும், ஆசிரியப்பா அகவலோசையும், கலிப்பா துள்ளலோசையும், வஞ்சிப்பா தூங்கலோசையும் பெற்று இசைக்கும். இவை நான்கும் சிறப்புடையன. இவைகளன்றிச் செப்பலோசை முதலினும் அகவலோசை இறுதியினுமாய்க் கலந்து நடக்கின்ற பாக்களும் சிலவுள. (இவைகளுக்கு உதாரணம் சென்றவாரம் காட்டினேம்). இத்தகைய பாவினே மருட்பா என்பர். இது அத்துணைச் சிறப்புடையதாகக் கருதப்படுவதில்லே. எனினும், இதனேயும் சேர்த்துக்கொண்டால், பாக்கள், வெண்பா ஆசிரியப்பா கலிப்பா வஞ்சிப்பா மருட்பா, என ஐவகைப்படும்.

இவ் வைவகைப் பாக்களும் செய்யுள்களின் ஒரு பிரிவு. மற்ருேர் பிரிவும் உளது. அதற்குப் பாவினம் எனப்பெயர். பாவினங்கள் தாழிசை துறை விருத்தம் என மூன்று. இவை,பாக்களின் இலக்கணங்களே முற்றிலும் ஏற்காமல் ஒருவாறு அப்பாக்களே ஒத்து வருதலின் பாஇனங்கள் என்னும் பெயர்பெற்றன. மருட்பா ஒழிய மற்ற நான்கு பாக்களுக்கும் தனித்தனி இம்மூன்று இனங்களும் உள. ஆதலின்,

(1) வெண்பாவும்—அதனேடு சேர்ந்த வெண்டாழிசை, வெண்டுறை, வெளிவிருத்தம் என்னும் மூன்று இனங்களும் செய்யுள்களின் ஒருதொகுதி.

(2) ஆசிரியப்பாவும்—அதனேடு சேர்ந்த, ஆசிரியத் தாழிசை, ஆசிரியத்துறை, ஆசிரியவிருத்தம், என்னும் மூன்று இனங்களும், இரண்டாந் தொகுதி.

(3) கலிப்பாவும்—அதனேடு சேர்ந்த, கலித்தாழிசை கலித்துறை கலிவிருத்தம் என்னும் மூன்றுஇனங்களும் மூன்ருந் தொகுதி.

(4) வஞ்சிப்பாவும்—அதனேடு சேர்ந்த, வஞ்சித்தாழிசை வஞ்சித்துறை வஞ்சிவிருத்தம் என்னும் மூன்று இனங்களும் நான்காந்தொகுதி.

(5) மருட்பா—இப்பாவினேச் சார்ந்த இனங்களில்லே—இது ஐந்தாந்தொகுதி

பொருட்கிடனுகிய சொற்களாலே, மோனே எதுகை முதலிய உறுப்புக்கள் அமையப்பெற்றுச் சிறக்கச் செய்யப்படுவது செய்யுள். அச்செய்யுள் பா என்றும் பாஇனம் என்றும் இருவகைப்படும்.

பரந்துபட்ட ஓசையுடையனவாய்ச் செல்கின்றமையால் பா எனும் பெயர் அமைந்தது என்பர் சிலர் (பரவுதல்-பரத்தல்). இவை, வெண்பா ஆசிரியப்பா கலிப்பா வஞ்சிப்பா மருட்பா, என ஐவகைப்படும்.

பாக்களுக்குரிய இலக்கணங்களினின்று வேறுபடினும், ஒருவாறு அப்பாக்களே ஒத்து நடப்பன பாவினங்கள். இவை, தாழிசை துறை விருத்தம், என மூவகைப்படும்.

கீழ்க்காணும் படம், இப்பிரிவுகளே நினேவிற்கொள்ள உதவியா யிருக்கும்:—



- செய்யுள்
  - பா
    - வெண்பா
    - ஆசிரியப்பா
    - கலிப்பா
    - வஞ்சிப்பா
    - மருட்பா
  - பா வினம்
    - வெண்டாழிசை-துறை-விருத்தம்
    - ஆசிரியத்தாழிசை-துறைவிருத்தம்
    - கலித்தாழிசை-துறை-விருத்தம்
    - வஞ்சித்தாழிசை-துறை-விருத்தம்

இனி, வெண்பாவின் இலக்கணத்தைக் கற்கப் புகுவோம்.

### வெண்பா

ஆன்ருேர் ஆக்கிய இலக்கியங்களில், திருக்குறள், புகழேந்திப்புலவர் பாடிய நளவெண்பா, பெருந்தேவனர் பாடிய பாரதம், ஔவையார் பாடிய நல்வழி, பிள்ளைபெருமாளேயங்கார் பாடிய திருவேங்கடமாலே முதலியன வெண்பாக்களா லானவை.

(1) பருவரலும் பைதலுங் காணுன்கொல் காம
ஞெருவர்க ணின்ருெழுகு வான்.

(2) நற்கொற்ற வாயி னறுங்குவளேத் தார்கொண்டு
சுற்றும்வண் டார்ப்பப் புடைத்தாளே—பொற்
பாலேநல் வாயின் மகள். [நேரான்

(3) இளேயரு மீர்ங்கட் டயர வுளேயணிந்து
புல்லுண் கலிமாவும் பூட்டிய—நல்லார்
இளநலம் போலக் கவினி வளமுடையார்
ஆக்கம்போற் பூத்தன காடு.

(4) இருநிலஞ் சேர்ந்த குடைக்கீழ் வரிநுதல்
ஆடியல் யானேத் தடக்கை யொளிறுவாள்
ஓடா மறவர் துணிப்பத் துணிந்தவை [மே
கோடுகொ ளொண்மதியை நக்கும்பாம் பொக்கு
பாடா ரிடிமுரசிற் பாய்புன னீர்நாடன்
கூடாரை யட்ட களத்து.

மேற்காட்டிய நான்கு பாக்களும் வெண்பாக்கள் இந்நான்கு பாக்களிலும் அமைந்துள தளேகளே ஆராய்வீராயின் எல்லாம் வெண்டளேகளாகவே இருக்கக் காண்பீர். ஓரடியின்கண் உள்ள சீர்கள் மாத்திரமன்றி ஓரடியின் ஈற்றுச்சீரும் மற்ற அடியின் முதற்சீருங் கூட வெண்டளேயே பெற்று நடக்கும். வெண்பாவில் வெண்டளேதவிர வேற்றுத்தளே வரவே கூடாது. பிறகு, இவ்வொரு பாட்டிலும் ஈற்றடியைப் பாருங்கள். மற்ற அடிகள் நாற்சீரடிகளா யிருக்க (அளவடி), ஈற்றடிமாத்திரம் முச்சீரடியாயிருக்கும் (சிந்தடி). வெண்பாவின் ஈற்றடி எப்பொழுதும் முச்சீரடியாகவே இருக்கவேண்டும்.

அதன்பின், ஈற்றடியின் ஈற்றுச்சீரைப் பாருங்கள். முதல்பாட்டு 'வான்' என்னுஞ் சீரால் முடிந்தது. இது அசைச்சீர். பெரும்பாலும் இரண்டு மூன்று நான்கு அசைகள் சேர்ந்தேசீர்களாகுமெனினும்(இவை,இயற்சீர்,உரிச்சீர்,பொதுச்சீர் எனமுறையே பெயர்பெறும்) ஓரே அசை,சிலபோது சீராகநிற்கக்கூடுமென்றும், அவ்வாறு நிற்கின்ற ஓரசைச் சீரிற்கு அசைச்சீர், என்பது பெயரென்றும் முன்னர்க் கூறியிருக்கின்ருேம்.'வான்' என்பது அசைச்சீர்; அவ்வசைநேரசையாதலால் அது நேரசைச்சீர். இரண்டாவது பாட்டின் ஈற்றுச்சீராய் நிற்கும் 'மகள்' என்பதும் ஓர் அசைச்சீர்தான்—இது நிரையசைச்சீர். மூன்ருவதுபாட்டின் இறுதிச்சீராகிய 'காடு' என்பது கா—டு என இரண்டு நேரசைகளேயுடைய இயற்சீர். நான்காவது பாட்டின் ஈற்றுச்சீராகிய 'களத்து' என்பது, களத்—து, என நிரையும் நேருமாய் வரும் இரண்டு அசைகளேயுடைய இயற்சீர். ஆயினும், காடு, களத்து, என்னும் அவை இரண்டும் குற்றியலுகரத்தில் முடிந்து ஒடுங்கியிசைக்கக் காண்பீர். இந்த இரண்டு ஈரசைச்சீர்களிலும், டு, து என்னும் இரண்டு அசைகளும் குற்றியலுகரத்தை ஏற்றிருப்பன. ஆதலின் அச்சீர்களின் இரண்டாவதுஅசைக்கு உரிய மாத்திரை அரையே. சிலர் இப்படி உகரத்தில் முடிகின்ற ஈரசைச்சீர்களே, இரண்டு அசையுடையனவென்று கொள்ளாது, ஓரசைச்சீர்களென்றே கொள்வர். கொண்டு, மற்ற நேரசை நிரையசைச் சீர்களினின்று, பிரித்துணர்த்தும் பொருட்டு இவைகளே நேர்பசை நிரைபசைகளென் றழைப்பர்(516-வது பக்கம்). எனின், வெண்பாவின் ஈற்றடியின் ஈற்றுச்சீர் எப்பொழுதும் ஓரசைச்சீராகவே யிருக்கவேண்டும் என்னலாம். அது,நேரசைச் சீராகவேனும், நிரையசைச்சீராகவேனும் நேர்பசைச் சீராகவேனும் நிரைபசைச் சீராகவேனும் இருக்கலாம். இவைகளே, நாள் மலர் காசு பிறப்பு, என்னும் வாய்பாடுகளால் குறிப்பர். (இவ்வாய்பாடுகளின் தகுதியைப் பின்னர் இன்னுஞ் சிறிது விரித்துரைப்போம்).

இந்நான்கு பாக்களேயும் ஓதிப்பார்ப்பீர்களாயின் அவை செப்பலோசை பெற்றுச் செல்வதை யுணர்வீர். ஆதலின், எல்லா வெண்பாக்களுக்கும் பொதுவாக இருக்கவேண்டிய இல்க்கணம் இவை நான்காகும்:—

1. வெண்டளே தவிர வேற்றுத்தளே வரலாகாது.
2. ஈற்றடி முச்சீரடியாக (சிந்தடி) இருத்தல் வேண்டும்.
3. ஈற்றடியின் ஈற்றுச்சீர், நாள் மலர் காசு பிறப்பு என்னும் இந்நான்கு வாய்பாடுகளில் ஒன்ருல் ஆனதாயிருத்தல் வேண்டும்.
4. செப்பலோசை அமைந்திருத்தல் வேண்டும். (முன்னேய மூன்றும் இச்செப்பலோசை ஊட்டுவதற்கு ஆதாரமாயிருப்பன.)

வெண்பாவிற்குரிய பொதுஇலக்கணமாகிய இவை நான்குந்தான், மற்ற ஆசிரியப்பா கலிப்பா வஞ்சிப்பா என்னும் மூவகைப்பாக்களே நோக்குமிடத்துச் சிறப்பாக நின்று, வெண்பாவை அந்த மூன்று வகைப்பாக்களின்று பிரிக்கின்றன.

இனி வெண்பாவில் வருகின்ற அடிகள், முச்சீராய் நிற்கும் ஈற்றடிதவிர, மற்றவைகளெல்லாம் நாற்சீருடைய அளவடிகளாயிருத்தல்வேண்டும். (ஆசிரியப்பாவும் கலிப்பாவுங்கூட அளவடிகளால் நடப்பனவாதலால், இது வெண்பாவின் சிறப்பிலக்கணம் என்னல் இயலாது) அவ்வடிகளும், இரண்டு வந்து ஒரு வெண்பாவாகலாம். அல்லது, மூன்று நான்கு ஐந்து ஆறு ஏழு அடிகளும் வரலாம். ஏழிற்கு மேற்பட்ட அடிகளும் வருதலுண்டு. முன் காட்டிய வெண்பாக்கள் முறையே, இரண்டு மூன்று நான்கு ஆறு அடிகளால் அமைந்திருக்கின்றன.

வெண்பாவில் வரக்கூடிய சீர்கள், ஓரசைச் சீர்களும், ஈரசைச்சீர்களும், மூவசைச்சீர்களிற் சிலவுமாம்.

1. ஓரசைச்சீர் வருவதாயின், அது முன்னுரைத்தபடி அவ்வெண்பாவின் ஈற்றுச் சீராயிருத்தல்

வேண்டும் மற்ற இடங்களில் இருத்தலாகாது. ஆதலின், ஒரு வெண்பாவில் ஓரசைச்சீர் வருவதாயின், ஒன்றேலன்றுதான் வருதல்கூடும். அதுவும் ஈற்றில் நிற்கவேண்டும்.

2. ஈரசைச் சீர்கள், நேர்நேர் (தேமா), நிரைநிரை (கருவிளம்), நேர்நிரை (கூவிளம்), நிரைநேர் (புளிமா) என நால்வகைப்படும். இந்நான்குவகை இயற்சீர்களும் வெண்பாவில் வருதல் இயலும். எனினும், ஈற்றுச்சீர் இயற்சீராயின் அது கருவிளம் அல்லது கூவிளஞ் சீர்களாயிருத்தலாகாது. தேமா அல்லது புளிமாச் சீர்களாகவே இருத்தல் வேண்டும். அதுவும், குற்றியலுகரத்தை (சிலபோது முற்றியலுகரமாகவும் இருக்கலாம்) ஈற்றிலுடையதாக இருத்தல் வேண்டும்.

3. மூவசைச்சீர்கள் எட்டில், தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய், என வரும் நேரசையை யீற்றிலுடைய நான்கு சீர்கள் மாத்திரந்தான் வெண்பாக்களில் வரக்கூடும். ஆகையாற்றான் இக் காய்ச்சீர்களுக்கு வெண்சீரெனும் பெயர் வந்தது.

தேமாங்கனி புளிமாங்கனி கருவிளங்கனி கூவிளங்கனி என்னும் கனிச்சீர்களேனும், பொதுச்சீர் எனப்படும் நாலசைச் சீர்களேனும் வெண்பாவில் வரா.

ஒரு வெண்பாவினுள் எல்லாச் சீர்களும் இயற்சீர்களாயிருக்கலாம்; அல்லது (ஈற்றுச்சீர்தவிர) எல்லாச் சீர்களும் வெண்சீர்களாயிருக்கலாம்; அல்லது இவை இரண்டும் கலந்தும் வரலாம்; பெரும்பாலும் கலந்தே வரும்.

தளைகளில், வெண்டளை தவிர வேறு தளை வெண்பாவில் வரலாகாது என்றோம். வெண்டளை இயற்சீர் வெண்டளை என்றும் வெண்சீர் வெண்டளை என்றும் இருவகைப்படு மென்பதைக் கற்றிருக்கின்றீர். இயற்சீர் வெண்சீர் என்னும் இரண்டு சீர்களும் வெண்பாவினுள் வரலாம் என்றமையால் அவ்விருவகை வெண்டளைகளும் வருதல் இயலும் என்பதும் பெறப்படும்.

இனி, வெண்பாவிற்குரிய ஓசை செப்பலோசை. அச்செப்பலோசை, ஏந்திசைச் செப்பலோசை, தூங்கிசைச் செப்பலோசை, (தூக்கிசை என்று சென்றவாரத்து இதழில் காண்பது அச்சுப்பிழை) ஒழுகிசைச் செப்பலோசை, என மூவகைப்படும் என முன்னர்க் கூறினோம். சீர் தளைகளின் தன்மைக்கேற்றபடி இச்செப்பலோசையின் விகற்பங்கள் விளையும்.

(1) எல்லாச்சீர்களும் வெண்சீர்களே ஆமாயின், அமையக்கூடிய வெண்டளை, வெண்சீர் வெண்டளை. முற்றும் வெண்சீர் வெண்டளையே பெற்றுவரும் வெண்பா, ஏந்திசைச் செப்பலோசையுடையதாயிருக்கும்.

(2) ஒரு வெண்பாவில் எல்லாச் சீர்களும், இயற்சீர்களேயா யிருக்குமாயின், அதனில் அமையக்கூடிய வெண்டளை இயற்சீர் வெண்டளையே. இப்படி முற்றும் இயற்சீர் வெண்டளையே பெற்றுவரும் வெண்பா, தூங்கிசைச் செப்பலோசையுடையதாயிருக்கும்.

(3) இயற்சீரும் வெண்சீரும் விரவிவருமாயின், இயற்சீர் வெண்டளை வெண்சீர்வெண்டளை ஆகிய இரண்டு வெண்டளைகளும் அமையக் கூடும். இப்படி இருவகைவெண்டளையும் விரவிவருகின்ற வெண்பா ஒழுகிசைச்செப்பலோசை யுடையதாயிருக்கும்.

முற்றும் வெண்சீர் வெண்டளை—
ஏந்திசைச் செப்பலோசை
முற்றும் இயற்சீர்வெண்டளை—
தூங்கிசைச் செப்பலோசை
இரண்டும் விரவுதல்—
ஒழுகிசைச் செப்பலோசை.

# மானதசாத்திரம்

## [PSYCHOLOGY]

[531-வது பக்கத் தொடர்ச்சி]

## (புலன்கள் - Perception)

### இடவுணர்வு

இடங்களை அளந்து பார்க்கின்றோம் அன்றோ? இந்த அளவுணர்வு எவ்வாறு எழுகின்றது? அளவு என்பது இயற்கையாகப் புலனாக எழுவதொன்றல்ல. அளவிடுவது என்பது ஒரு பொருளோடு ஒரு பொருளை ஒப்பிட்டுப்பார்ப்பதாக முடிகின்றது. ஒத்திட்டுப் பாராமல், ஒரு பொருளின் தனியளவை உணர இயலாது. இவ்வாறு ஒத்திட்டுப் பார்ப்பதற்கு உதவியாக உலகினர், அடி முழம் முதலிய பொது அளவைகளை மரபாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். இப்பொது அளவைகளோடு ஒவ்வொரு பொருளையும் ஒன்று வைத்து ஒப்பு நோக்கியே பொருள்களின் அளவினையுணர்கின்றோம். ஒரு பொருளின்மேல் மற்றொரு பொருளை வைத்து ஒப்பிட்டுப் பார்த்துப் பார்த்துத்தான் அளவை உணர்கின்றோம். அளவுகோலைப் பொருள்களின்மேல் வைத்து அளப்பதையும் காண்க.

இவ்வாறு எழும் அளவுணர்வு பலவகையானும் எழுகின்றது. எனது வாய், வாய்க்குச் சிறிது போலத் தோன்றுகிறது. நாக்கால் தடவிப்பார்த்தால் பெரிதாகத் தோன்றுகிறது. கண்ணாடியில் விழும் வாயின் எதிரொளியைப் பார்த்தால் இடைநிகரதாய்த் தோன்றுகிறது. எனது பல்லில் ஒன்று விழுந்து விடுகிறது; அந்தக் குழியை நாக்கால் தடவிப்பார்த்தால் பெரிய குழி எனத் தோன்றுகிறது. ஆனால் அக்குழியின் சிறு விரலையும் உள்விட முடியாமற் போகின்றது. இவ்வாறு பல வழியாக எழும் உணர்வுகளில் ஏதேனும் ஒன்றையே உண்மையெனக் கொள்கிறோம். பற்குழியின் அளவை யறிவதற்கு நாக்கைவிடக் கையையே சிறந்த உதவியாகக் கொள்கின்றேன். கண்ணாடியில் அதன் எதிர்ஒளியைக் காணமுடியுமானால் கண்ணையே சிறந்த உதவியாகக் கொள்கின்றோம்.

கண் என்ற ஒரு பொறிவழியாக ஒரு பொருளை உணரும்போது பலவகை உணர்வுகள் எழுகின்றன.



நாற்காலியொன்றை அருகிலிருந்து பார்க்கிறேன். நாற்காலியாகவும் நாற்புறமுடையதாகவும் தோன்றிய அப்பொருளே தொலைவில் இருந்து பார்க்கும்பொழுது வேறு வடிவாகத் தோன்றுகிறது. மூன்று கால்களே தோன்றுகின்றன; ஓரே யளவாக இருந்த நான்கு புறங்களும் வெவ்வேறு அளவாகத் தோன்றுகின்றன. கம்பரொடுகலந்து அவருள்ளத்தை உள்ளபடிஎடுத்துரைக்கும் எனது நண்பர் சேஷாசலம் ஐயர் அவர்களை அருகிலிருந்து பார்க்கிறேன்; 5½ அடி உயரமாகத் தோன்றுகிறார். சிறிது தொலைவில் சென்று காண்கிறேன்; உயரம் சிறிதுசிறிதாகக் குறைந்து விடுகிறது; அறமன்றத்தின் முடியில் உள்ள கலங்கரை விளக்கருகிலிருந்து காணும்போது தமிழ் அளித்த குறுமுனி போல விரற்கடையாகக் குறுகி விடுகின்றார். இவ்வாறு கண்ணே ஒரு பொருளைப்பற்றிப் பலவகையுணர்வுகளை எழுப்புவதைக் காண்க. ஆனால் பழக்க வழக்கத்தால் இத்தகைய பல வுணர்வுகளிலும் ஒருணர்வைமட்டுமே யுண்மையெனக் கொள்கிறேன். அதனாலன்றோ கலங்கரை விளக்கிலிருந்து கண்டபோதும் திருவாளர் சேஷாசலம் ஐயரவர்களைக் குறுமுனியென்று கொள்ளாது 5½ அடியுள்ள ஐயரவர்களாகவே யுணர்கிறேன்.

இவ்வாறு பல வுணர்வுகளிலும் ஒன்றை மட்டும் உண்மை எனக் கொள்வது எங்ஙனம்? ஈது பழக்கத்தின் பயனாகும். கண்ணாடி பார்த்துப் புனைந்து கொள்வதை நினைப்பூட்டிக் கொள்வோமானால் இவ்வுண்மை சிறிது புலனாகும். கண்ணாடிபார்த்துப் புனைந்துகொள்வோர் முதலில் ஒரு புது உலகத்தில் புகுகின்றனர். வலமிடமாகவும் இடம் வலமாகவும் கண்ணாடியில் அனைத்தும் மாறிக்கிடக்கின்றன; முதன் முதலில் அம்மாறுபாட்டத்தை அறியாது நாம் திகைக்கின்றோம். சிறிது பயின்றதும், எல்லாம் பழக்கமாய்விடுகின்றது. அப்புதிய இடவுணர்வு நிலைபெற்றுவிடுகின்றது. அதற்கேற்பத் தவறின்றி ஒழுகுகின்றோம். கண்ணாடி நிழல் உலகமே பொருத்தமுடையதாகவும் தொடர்ச்சி யுடையதாகவும் தோன்றுகின்றது. அங்ஙனமேதான் நமது இடவுணர்வுகளும் பழக்கத்தால் தொடர்புபெற்று உண்மை எனத் திகழ்கின்றன.

இயற்கையன்னை சிக்கனமாகக் குடித்தனம் செய்பவள். வீணே தன் ஆற்றலைச் செலவிடுபவள் அல்லள். அந்தச் சிக்கனத்திட்டத்தின்படியே நமது உணர்வுகளும் இயற்கையில் அமைந்துகிடக்கின்றன. ஓரே பொழுதில்எழுகின்ற புலனனைத்தையும்ஒன்றாகஇயைவித்து அவற்றை ஒரு பொருளின் பல பண்புகளாகக் கொள்கின்றோம். நெருப்பு எரிகின்றது; செஞ்சுடர் கண்ணுக்குப்புலனாகின்றது; கலகல என்றெரியும் ஒலி காதுக்குப் புலனாகின்றது; சூடு உடம்பிற்குப் புலனாகின்றது. வெவ்வேறாக ஓரே பொழுதில் புலனாகும் இவையனைத்தையும் ஒன்றுசேர்த்து நெருப்பு என்ற ஒரு பொருளின் பலவகைப் பண்புகள் எனக் கொள்கின்றோம். இவ்வாறு வெவ்வேறாக எழும் பலவகைப் புலன்களை இங்ஙனம் இயைவித்தே உலகத்துப் பொருள்களைப் படைத்துக்கொண்டு உலகில் பழகிவருகின்றோம் என்பது கூத்துமேடை நிகழ்ச்சி யொன்றால் நன்கு விளங்கும். அரசனைப்போலக் கூத்தாடுவதில் ஒருவன் பெயர்போனவன், ஆனால் அவனுக்கோ யாழ் மீட்டத் தெரியாது; ஆடவேண்டிய ஆட்ட[illegible] ணன் வரலாறு. என் செய்வது? அவ[illegible] ஒரு யாழைக் கொடுத்தனுப்புகின்றனர். அவனும் அவ்வியாழைக் கூத்துமேடையில் தடவுகின்றான்; ஆனால் அதிலிருந்து ஓரொலியும் எழுவதில்லை. யாழ்நரில் தலைசிறந்த ஒருவன் திரைக்குப்பின்னால் இருந்து தன் யாழை மீட்டுகின்றான். அரசனாக ஆகுவோன் தனது யாழைத் தைவரும்இயக்கத்தைக் காண்கிறோம். அதே பொழுதில் திரைக்குப் பின்னால் இருந்து எழும் யாழொலியையும் கேட்கின்றோம். இரண்டையும் ஒன்றாக இயையவைத்துக் கூத்துமேடையில் உள்ள உதயணனே யாழ்மீட்டிப் பாடுகிறான் என நினைத்து மகிழ்கின்றோம். ஓரே பொழுதில் எழும் காட்சிப்புலனையும் கேள்விப்புலனையும் ஒன்றாக இயைத்துக் காணும் நமது பழக்கத்தால் அன்றோ இவ்வாறு நிகழ்கின்றது.

ஓரே பொழுதில் பலபுலன்கள் எழுகின்றபொழுது அவற்றை இவ்வாறு ஒன்றிலொன்று புகுத்தி ஒருவடிவமாக்கிக்கொள்கின்றோம். அவ்வாறு பல புலன்களும் ஓரே பொழுதில் எழவேண்டுமானால் அவை பலவேறு பொறிகள் வாயிலாகவே எழவேண்டும். நெருப்புணர்வு எழும்போது, சூடு உடம்பிலும், கலகல ஒலி காதிலும், செந்நிறம் கண்ணிலும் எழுந்தமைகாண்க. ஓரே பொறியிலிருந்து பல புலன்கள் ஓரே பொழுதில் எழுதல் இயலாது; அவை ஒருங்கெழாது தொடர்ந்தே எழுகின்றன. வட்டவடிவான நாற்காலியைக் காணும்போது, அதே இடத்தில் முக்காலியையும் காணுவது இயலாது. நாற்காலியையும் முக்காலியையும் ஒன்றின் ஒன்று முற்றும் ஊடுருவி இருப்பனவாகக் கொள்ளாது, ஒன்றின் புறத்தொன்று தொடர்ந்து இருப்பதாகக் கொள்கிறோம். இவ்வாறுதான் இடவுணர்வு அகன்றுகொண்டே போகின்றது. என் வீட்டு மேன்மாடியில் மேற்கே பார்த்துக்கொண்டே எழுதுகின்றேன். வடக்கிலிருந்து தெற்காகப் பார்க்கிறேன். கூவமாறும் பாலமும் கிறிஸ்தவர்கோயிலும் புகைவண்டிக் கம்பிகளும் முறையே தெரிகின்றன. வடக்கே திரும்பியதும், புகைவண்டிக் கம்பிகள் புலனாயதும் பாலம் மறைகின்றது. தெற்கே எவ்வெவற்றைப் பார்த்தேன் என்பதை மறந்தால் சிறிது தெற்குப் புறமாகத் திரும்பினால் அவற்றைக் காண்கிறேன். இவற்றைத் தொடர்ந்து ஒன்றன்பின் ஒன்றாகப் பார்த்துவரும்போது எனது முகமும் கண்களும் அசையும் இயக்கத்தையும் உணர்கின்றேன். பின்னர், பாலத்தையும் கோயிலையும் நான் நினைக்கும்போது, பாலத்தைப் பார்த்தபின்னர்க் கோயிலைப்பார்ப்பதற்கு என்னுடைய முகத்தையும் கண்ணையும் இடம் வலமாக அசைத்த இயக்கம் நினைவிற்கு வருகிறது. அவ்வாறுதான் அவை ஒன்றின்நின்று ஒன்று எவ்வளவு தொலைவில் இருக்கின்றன என உணர்கின்றேன். இவ்வாறு அளவுணர்வு எழுவதற்கு இயக்கவுணர்வும் உதவுவதால், இயக்கவுணர்வே அளவுணர்வு என்றும், இரண்டும் வேறல்ல என்றும் ஒரு சிலர் மயங்கிக்கூறுகின்றனர். அளவு என்ற பொதுத்தன்மையைக் காட்டிய சிறப்புப் பொருள்களாகிய பாலம் கோயில் என்றவை எல்லாம் கட்புலனாய்த் தொடர்ந்து நின்றமையை மறந்துவிடுவதால் அன்றோ இயக்கவுணர்வையும் அளவுணர்வையும் ஒன்றென மயங்கி யுணர்கிறோம். கட்புலனாகும் பாலமும் கோயிலும் இல்லையானால், அளவுஎன்ற பேச்சுக்கே இடமேது.

[illegible]வே அளவுணர்வு என்பது உண்மையல்ல. [illegible]இயக்கவுணர்லே அளவுணர்விற்குப்

188926

பேருதவியாகின்றது. குருடன் பொருள்களை அறிந்து கொள்வதைப் பாருங்கள். கையால் பொருள்களைத் தடவிப் பார்த்தே பொருளின் அளவை அறிகின்றான். அவனுடைய கையின் இயக்கமே அவனுக்கு அளவா கமுடிகின்றது. குருட்டுக் குழந்தையொன்று ஒரு பந்தினை ஒரு கையால் தொட்டுப்பார்க்கிறது. வட்டவடிவு, வழவழப்பு, குறிப்பிட்ட அளவு முதலியன புலனுகின்றன. மற்றொருகையாலும் தொட்டுப் பார்க்கிறது. முன்னெழுந்த புலன்களே எழுகின்றன. ஒருவகையான புலன்கள் மறு முறையும் எழுந்தபோது வலக் கையால் தொட்ட பந்தே இடக்கையாலும் தொடப்பட்டது என வுணர்கின்றது. இவ்வாறு பல பொருள்களையும் தொட்டறிந்து உலகைப் படைத்துப் பெருக்குகின்றது. அவ்வாறு அறிந்த பொருள்களையும் இடத்தையும் ஒருங்குகூட்டி ஒரு தொடர்பாக்கி ஒன்றாகத் தொடர்ந்து விளங்கும் உலகைப் படைக்கின்றது. கண்ணுள்ள நாம் கையால் தொட்டறிவதோடு கண்ணாலும் தொட்டறிகிறோம். கையால் சிறிய இடத்தையே ஒரேபொழுதில் காணலாம்; கண்ணாலே பெரிய இடப்பரப்பையும் ஒரே பொழுதில் ஒன்றாகக் காணலாம். இவ்வளவே வேற்றுமை. ஒரு குழந்தை ஓடிவந்து ஒரு நாற்காலியில் முட்டிக்கொள்கிறது. அதன்முழங்காலில் அடிபடுகிறது. பின் அந்த அடியின் வீக்கத்தைக் காணுந்தோறும் நோயை உணருந்தோறும் அந்த நாற்காலியையும் அந்த நாற்காலி யிருந்த இடத்தையும் உணர்கின்றது. இவ்வாறு தட்டிமுட்டிப் பல பொருள்களையும் பல இடங்களையும் உணர்ந்து அவற்றை ஒன்றுசேர்த்துத் தானறிந்த உலகத்தைப் படைத்துக்கொள்கிறது. இவ்வாறுதான் நாம் அனைவரும் நம் இடவுணர்வை அகலப்படுத்துகின்றோம்.

# அப்பர்

## அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்.

### 26. ஆகாய கமனம்

[533-வது பக்கத் தொடர்ச்சி]

மேக நலூர்தியர் மின்போல் மிளிர்சடைப்
பாக மதிநுத லாளையோர் பாகத்தர்
நாக வளையினர் நாக வுடையினர்
போகர் புகலூர் புரிசடை யாரே.

அப்பர்-திருப்புகலூர்-பண்-இந்தளம் 2.

ஆகாய கமனமென்பது பறவைகள்போல் ஆகாயத்திலும் உலாவிவரும் ஒருவகைத் திறமாம். தாயுமானவர் சித்தர்கணத்தைப் புகழுமிடத்தில் "திக்கொடு திகந்தமும் மனவேக மென்னவே சென்றோடியாடி வருவீர்!" என்றார். இது பஞ்சபூதங்களிடையே யுள்ள ஒருவகை அலைப்பு * (wave). தன்மையை யறிந்து அதைத் தக்கவாறு பயன்படுத்தும் கலையாம்இது. இக் காலத்தில் காற்றின் தன்மையறிந்து ஆகாய விமானங்கள் அமைத்திருப்பதை நாம் காண்கின்றோ மன்றோ? இதுவும் ஒருவகை ஆகாய கமனமேயாம். முற்காலத்தில் முப்புரங்களும் பறவைகள்போலப் † பறந்தன வென்பதை பல நூல்களிற் காண்கின்றோம். ஆயினும் முப்புரங்களானவை வாயுமண்டலத்தோடே நிற்காமல் இந்திரலோகத்திற்குஞ் செல்ல ஆரம்பித்தனவென்றும், அதனால் தேவர்களும் சிவபெருமானிடம் முறையிட்டனரென்பதையும் புராண இதிகாசங்களில் அறிகின்றோமன்றோ?

திரிபுரங்களின் ஆகாயவிமானங்கள் பூமிக்குச் சமீபமாய் வாயுமண்டத்திலே மாத்திரம் உலவவில்லையென்றும் வாயுமண்டலங்கடந் தப்புறமும்சென்று விண்ணவர்நாட்டையு மழித்ததென்றும், அதாவது வேறு உலகங்களுக்குச் செல்லத்தக்க சக்தி வாய்ந்திருந்தனவென்றும் நமது நூல்கள் காட்டுகின்றன. அதை அப்பரும் கூறியிருப்பதை,

நிலைவலி யின்றி யெங்கு நிலனோடு விண்ணு
நிதனஞ்செய் தோடு புரமூன்
றலைநலி வஞ்சியோடி யரியோடு தேவ
ரரணம் புகத்த னருளாற்
கொலைநல வாளி மூள வரவங்கை நாணு
மனல்பாய நீறு புரமா
மலைசிலை கையி லொல்க வளைவித்த வள்ளல்
அவனு நமக்கோ சரணே.

தசபுராணம்-பண் - பழம்பஞ்சரம். 5.

என்னும் தோத்திரத்தாலறிக.

ஆகாயகமனம் இருவகைத்து. யோகசித்தியால் தேகத்தை * மிகவும் இலேசாக்கிப் பறவைபோல் வாயுமண்டலத்தில் பறந்தும், பிறகு அதற்கும் சூட்சும ஆகாயத்தன்மையாய் வாயுமண்டலங்கடந்து அப்பால் பற்பல மண்டலங்களுக்குச் சென்றும், அவ்வம் மண்

* அலைக்கின்ற நீர்நிலம் காற்றன லம்பரமாகி நின்றீர்
கலைக்கன்று சேருங் கரத்தீர் கலைப்பொரு ளாகிநின்றீர்
விலக்கின்றி நல்கு மிழலையுளீர் மெய்யிற் கையொடுகால்
குலைக்கின்று நும்மை மறக்கினு மென்னைக் குறிக்கொண்
[மீனே!

திருவீழிமிழலை - திருவிருத்தம் 3.

† துறவித்தொழிலே புரிந்துன் சுரும்படியே தொழுவார்
பிறவித்தொழிலது மாற்று கண்டாய்! மதின்மூன்றுடைய
அறவைத்தொழில் புரிந்தந்தரத்தே செல்லு மந்திரத்
[தேர்ப்
பறவைப் புறமெரித்தா யெம்மையாளும் பசுபதியே.

பசுபதி திருவிருத்தம் 7.

* சித்திசெய் பவர்கட் கெல்லாம் சேர்விடம் சென்றுகூடப்
பத்திசெய் பவர்கள் பாவம் பறைப்பவ றிறப்பிலாளர்
முத்திசெய் பவள மேனி முதிரொளி நீல கண்டர்
வித்தினின் முளையர் வீழி மிழலையுள் விகிர்த னாரே.

திருவீழிமிழலைத் - திருநேரிசை. 9.



டலத்தன்மையில் தேகத்தை மாற்றி † உலாவிவரும் யோகசத்தி யொன்றாகும். இத்தகைய சக்தி இக்காலத்தைப்போல் முற்காலத்திலும் செய்வதற்கு அரியதாயிருந்ததேயாம்*. ஆயினும் யந்திரசக்தியால்விமானங்கள்செய்து ஆகாயத்தில் பறந்தவிஷயம் உண்மையென்பதற்குப் பற்பல அத்தாட்சிகள் காணப்படுகின்றன. அப்பர் தேவாரத்தில் இராவணன் கயிலாயத்திற்குச் சென்றபோது ஏறிச்சென்றவியானம் (Car) தேர் போலிருந்ததென்றும், அதை ஒரு பாகன் (Driver) ஓட்டிச் சென்றானென்றும் அவ்விமானம் மெதுவாகவும் வேகமாயும் செல்லக்கூடு மென்றும், அதன்வேகத்தை அப்போதைக்கப்போது பாகன் மாற்றக்கூடு மென்றும், அதற்குத்தக்க சூட்சிகள் அவ்விமானத்தில் ஏற்பட்டிருந்தன வென்றும் கீழ்வரும் பாசுரங்களாலறிக.

கடுகியதேர் செலாது கயிலாயமீது
கருதேலுன்வீர மொழிநீ
முடுகுவ தன்றுதன்ம மெனநின்று பாகன்
மொழிவானைநன்று முனியா
விடுவிடு வென்றுசென்று விரைவுற்றரக்கன்
வரைபுற்றெடுக்க முடிதோள்
நெடுநெடு விற்றுவீழ விரலுற்றபாத
நினைவுற்றதென்றன் மனனே.

தசபுராணம் - பண் - பழம்பஞ்சரம். 11.

தருக்கின வரக்கன் தேரூர்
சாரதி தடைநிலாது
பொருப்பினை யெடுத்த தோளும்
பொன்முடி பத்தும்புண்ணாய்
நெரிப்புண்டங் கலறிமீண்டு
நினைந்தடி பரவத்தம்வாள்
விருப்பொடுங் கொடுப்பர்வீழி
மிழலையுள் விகிர்தனாரே.

திருவீழிமிழலைத் திருநேரிசை 10.

இராவணன் ஆகாயத்தில் உலாவுவதற்கு அமைப்பித்த புஷ்பக விமானம் *இராமர் சேனையோடு ஏறிச் செல்லத்தக்க இடமுடையதென்று இராமாயணம் கூறும். ஆயினும் தேவாரத்தில் அதைத் தேர் என்றே பல விடங்களிற் கூறியிருப்பதால் அது சிலர் செல்வதற்குப் பயன்பட அமைந்ததென்றே எண்ணல் வேண்டும். அவ்வகை விமானத்திற்கும் திரிபுரங்களின் ஆகாயக் கோட்டைகளுக்கும் தேவாரத்தில் பேதங் காட்டப்பட்டிருக்கின்றது. அதாவது திரிபுரங்களை நகரங்கள் என்று கூறப்படுவதால் அதில் அரக்கர் பலர் வசித்திருக்க நேர்ந்ததென்பது வெளிப்படை.

நம்பனை நகரமூன்று மெரியுண வெருவநோக்கும்
அம்பனை யமுதையாற்றை யணிபொழிற் கச்சியுள்ளே
கம்பனைக் கதிர்வெண்டிங்கள் செஞ்சடைக் கடவு
[ளன்னைச்
செம்பொனைப் பவளத் தூணைச் சிந்தியா வெழுகின்
[றேனே.

திருவேகம்பம் - திருநேரிசை 1

எனத் திரிபுரங்களையும், அவற்றின் இயக்கத்தைப்பற்றியும், விசாலத்தைப் பற்றியும் அப்பர்

விரியுந் தண்ணிள வேனலில் வெண்பிறை
புரியுங் காமனை வேவப் புருவமுந்
திரியு மெல்லையில் மும்மதில் தீயெழுந்
தெரிய நோக்கிய வின்னம்ப ரீசனே.

திருவின்னம்பர் - திருக்குறுந்தொகை.

என்றும், இராவணன் விமானத்தைக் குறித்து மொழியுங்காலையில் தேர்போல் ஒருவகைச் சக்கரத்தால் ஆகாயத்தில் ஓடும் சக்திபெற்றதென்று காட்டுவதும் காண்க:—

கடவுந் திகரி கடவா தொழியக்
கயிலையுற்றான்
படவுந் திருவிர லொன்றுவைத் தாய்பனி
மால்வரைபோல்
இடவம் பொறித்தென்னை யேன்றுகொள் ளாயிருஞ்
சோலைதிங்கள்
கடவுங் கடந்தையுட் டூங்கானை மாடத்தெந்
தத்துவனே.

திருத்தூங்கானைமாடம் - திருவிருத்தம் 10.

இவ்வாறு திரிபுரங்களின் இயக்கமும் இராவணன் புட்பகவிமான இயக்கமும் மொழியுங்கால், பூமியின் ஆக்ரோஷணசக்தியை வென்று பறவைபோல் மேலே கிளம்பிச் செல்லும் விந்தை ஆங்காங்கு அப்பர் தேவாரச் செய்யுட்களிற் காணப்படுவதால், அக்காலத்தில் இக்கலை எவ்வளவு விருத்தியடைந்திருந்ததென்றும், அதை நல்லோரும் தீயோரும் ஒருவகைச் செல்வக் கலையாய் ஏற்றம் கொடுத்தாரென்பதும் அறிஞர் இக் காலத்தில் ஆராய இடமுண்டு.

† இவ்வாறு பரமன் விளையாடுவதை அப்பர்
முத்த னேமுதல் வாமூகி மூம்மூளை
யொத்த னேயொரு வாவுரு வாகிய
சித்த னேதிரு வீழி மிழலையு
ளத்த னேயடி யேனைக் குறிக்கொளே.

திருவீழி மிழலைத் திருக்குறுந்தொகை 4

* இம்மை வானவர் செல்வம் விளைத்திடும்
அம்மை யேற்பிற வித்துயர் நீக்கிடும்
எம்மை யாளு மிடைமரு தன்கழல்
செம்மை யேதொழு வளர்வினை சிந்துமே.

திருவிடைமருது - திருக்குறுந்தொகை 4.

* மதத்த வாளரக் கன்மணிப் புட்பகம்
சிதைக்க வேதிரு மாமலைக் கீழ்ப்புக்குப்
பதைத்தங் கார்த்தெடுத் தான்பத்து நீண்முடி
பிதக்க வூன்றிய பேரெயி லாளரே.

திருப்பேரெயில் - திருக்குறுந்தொகை 11.

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்— 4. நகர்நீங்கு படலம்.

[529-வது பக்கத் தொடர்ச்சி]

கற்றிலே னீந்ததோ யாது மில்லேன்

விதிக்கும் எதிராகக் கொதிக்கின்ற வெஞ்சினத்துத் தன் தம்பியைத் "தாய்தந்தையர்" என்ற உயரிய பெயரினால் தணிவிக்கமுயன்ற இராமனை நோக்கி,

நற்றா தையுநீ தனிநா யகனீ வயிற்றிற்
பெற்றாயு நீயே பிறரில்லை பிறர்க்கு நல்கக்
கற்றா யிதுகா ணுதியின் றெனக்கைம் மறித்தான்
முற்றா மதியம் மிலைந்தான் முனிந்தானை யன்னான்

[கலைநிறையாத சந்திரனைச் சூடிய உருத்திரனை ஒத்த இலக்குவன், கோவந் தணியாதவனாகி, எனக்கு நல்ல தந்தையும் நீயே, ஒப்பற்ற தலைவனும் நீயே, என்னை வயிற்றில்பெற்ற தாயும் நீயே, வேறொருவருமில்லை. மற்றவர்க்குக் கொடுக்கவே கற்றிருப்பவனே, இன்று யான் அத் தாய்தந்தையர்களைச் செய்யப்போவதை பார்" என்று (இராமன் சொல்லிய அமைதியை ஒவ்வாது) கையசைத்தான்]

பிறர்க்கு நல்கக் கற்றவன் என்று தன்னை இயம்பிய அம்மாற்றத்தில் இராகவன் சிறிது குறைகண்டிருத்தல் வேண்டும். மறம்போல் அறமும் கல்லாமற் சான்றதே சிறப்புடைத்து. கற்று நல்குதல் உத்தமத்தின ளவுவரை யுயர்ந்ததன்று. எனினும் தன்னியல்பு உணராமலுரைத்தா னென்னத் தம்பியை இவன் சலித்ததை வேறோர்விதத்தில் விளக்குகின்றனன். 'கற்றாய்' என்ற முறையை மறக்காமல் தான் நல்கியதென்னும் நிகழ்ச்சியையே மறக்கப் புகுந்தவனாய்,

வரதன் பகர்வான் வரம்பெற்ற வடாளிவ் வையஞ்
சரதம் முடையா ளவளென் றனித் தாதை செப்பப்
பரதன் பெறுவா னினியான் படைக்கின்ற செல்வம்
விரதம் மிதினல்லது வேறினி யாவ தென்றான்

[இராமன், 'வரத்தைப்பெற்ற கைகேசிதான் இவ்வுலகத்தை மெய்யாக உடையவள். அவள் என் ஒப்பற்ற தந்தைக்குச் சொல்லப் பரதன் அடைவான், இனி நான் ஈட்டுகின்ற செல்வம் தவமாகும். இதனில் நல்லது வேறு இனி யாவதாகக்கூடும்" என்று சொல்வானாயினான்]

'முன்னே உனக்குக் கொடுத்த அரசைப் பின் பரதனுக்குக் கொடுத்தது மன்னவன் குற்றமன்றோ' என்று வினவிய இலக்குவனுக்கு, "கொடுப்பதன்முன்கொள்ள மூண்டது என் குற்றமன்றோ" என்று விடையளித்துப் பிறர்குற்றத்தைத் தனதாக்கிக்கொண்ட பெருந்தன்மைக்கு நிகராக இங்கு இராமன், "பிறர்க்கு நல்கக் கற்றாய்" என்பது புகழாமாயின் அப்புகழிற்குந் தான் பாத்திரனல்லன் என்னச் சாதிக்கும் மேன்மை இது பாராட்டற் குரியது. "இவ் வையமோ கைகேயினது; அவள் அதனை அரசனைக்கொண்டு பரதனுக்குக் கொடுப்பித்தாள், ஆதலின் எதனையும் யாருக்கும் நான் நல்கவில்லையே" என விரகுரைக்கும் தனக்கு இலக்குவன் இன்னும் இணங்காமையால்,

ஆன்றான் பகர்வான் பினுமைய
விவ்வைய மையற்
றோன்றா நெறிவாழ் துணைத்தம்
பியைப்போர் தொலைத்தோ
சான்றோர் புகழுந் தவத்தாதையை
வாகை கொண்டோ
ஈன்றாளை வென்றோ வினி யிக்கதந்
தீர்வ தென்றான்

[சிறந்தவனாகிய இராகவன் பின்னும் கூறுவானாகி, "ஐயனே, மயக்கற்ற நன்னெறியில் வாழ்கின்ற துணைவனாகிய தம்பி பரதனைப் போரில் வென்றோ, மேலோர் புகழும் தவமுடைய தந்தையை வெற்றிகொண்டோ, பெற்றவளைச் செயித்தோ நீ இக்கோபம் தீர்வாய்"—என்றான்]

இதுகேட்ட இலக்குவன், இராமனது கருத்திற் குடன்பட்டிலனேனும், அவன் சொல்லின்முன் தன் செயல் இனிச் செல்லாதென்னும் சலிப்பினனாய்ச் சோர்ந்துபோனான். ஆதலின்,

செல்லுஞ்சொல் வல்லானெதிர் தம்பியுந்
தெவ்வர் சொல்லுஞ்
சொல்லுஞ் சுமந்தே னிருதோளெனச்
சோம்பி யோங்குங்
கல்லுஞ் சுமந்தேன் கணைப்புட்டிலுங்
கட்ட மைந்த
வில்லுஞ் சுமக்கப் பிறந்தேன்
வெகுண்டென்னை யென்றான்

[தடுக்கமாட்டாமல் யாவரையும் இணக்குகின்ற சொற்களில் வல்லவனாகிய இராமனுக்கு எதிர்மொழியாக இலக்குவன், "உனக்கு முடிசூட்டி வைக்காத நானொரு தம்பியோ என்று என்னை என் பகைவர் இனி இழித்துரைக்கப் போகின்ற பழிச்சொல்லையும் சுமந்தேன்; இரண்டு தோள்களெனச் சோம்பிவளரும் கல்லின் பாரத்தையுஞ் சுமந்தேன்; அம்பறாத் தூணியையும் கட்டு அமைந்த வில்லையும் சுமக்கப் பிறந்தேன். யான் வெகுண்டு என்ன பயன்"—என்றான்]

நகைச்சுவையினிடையே அவலம் கலக்க இயலாதெனினும், ஆசியம் சேர்ந்து அவலச்சுவையை அதிகமாக்கல் கூடும். 'யாண்டோ அடியேற்கு இனிச் சீற்றம் அடுப்பது' என்ற இலக்குவன் கேள்வியில் இத்தன்மை சிறிது தோன்றும். இங்கு 'வில்லுஞ் சுமக்கப் பிறந்தேன் வெகுண்டென்னை' என்பதும் ஒருவாற்றால் அன்னதே. மீண்டும், இவ்விருவரும் சுமித்திரைபால் விடைபெற்றிருக்கையில், கைகேசி யனுப்பிய சீரையொடு அங்கடைந்த மடவாரை நோக்கி,

வள்ள றம்பி
யாணர்த் திருநா டிழப்பித்தவ ரீந்த வெல்லாம்
பூணப் பிறந்தானு நின்றானவை போர்வி லோடுங்
காணப் பிறந்தேனு நின்றேனவை காட்டு
[மென்றான்

[இராமனது தம்பியாகிய இலக்குவன், "அழகிய செல்வமுடைய நாட்டை இழக்கும்படி செய்த கைகேயி எதனைக் கொடுத்தாலும் அதனை அணிந்து கொள்ளப் பிறந்த இராமனும் நிற்கின்றான்; அதனை என் போரிற்குரிய வில்லோடு காணும்படி பிறந்த நானும் இருக்கின்றேன்—நீவிர் கொணர்ந்த சீரையைக் கூசாது காட்டுங்கள்"—]

என்றவிடத்தும் தன்னைப் பழித்துத் தமையனைப் பரிகசிப்பதுபோல் தானுற்ற துயரின் பெருக்கத்தையே தெரிவிக்கின்றனன்.

மாயாப்பழியாள் தந்தவந்த வற்கலையை, வாணித்தில வெண்ணகை வனிதையர் கொணர்ந்தவப்போது, தண்டாவனஞ் சேர்வதற்கே சமைந்த தன்னிரு மக்களைக் கண்டு புண்தாங்கு நெஞ்சத்தினளாய்ப் படிமேற் புரண்டு உண்டாய துன்பக்கடற்கு எல்லை யுணர்ந்திலாத சுமித்திரையை இராமன், மனந்தேற்றுதற்கேற்றபடி செய்வானாகி, போர்வா ளரசர்க்கிறையைத் தான் பொய்த்தவ னாக்குத லொல்லாதெனவும், கார்வான் நெடுங்கானை இறைகண்டு மீள்வானெனவும் இயம்பி,

கான்புக் கிடினுங் கடல்புக் கிடினுங் கலிப்போர்
வான்புக் கிடினும் மெனக் கன்னவை மாண யோத்தி
யான்புக்க தொக்கும் மெனையார் நலிகிற்கு மீட்டார்
ஊன்புக் குயிர்புக் குணர்புக் குலையற்க வென்றான்

[யான் காட்டை யடைந்தாலும் கடலை அடைந்தாலும் பொலிவுடைய வானுலகத்தை யடைந்தாலும், அவை எனக்குச் சிறந்த அயோத்தியை அடைந்ததையே ஒக்கும். எவ்விடத்தும் என்னை வருத்தக்கூடியவர் யார்? ஆதலால் உடலையும் உயிரையும் உணர்வையும் ஊடுருவிச் சிதைக்கும் இவ் வருத்தத்தை நீ எய்தவேண்டா—எனக் கூறினான்]

அப்போது, கைகேசியின் சிலதியர் கொணர்ந்த சீரையைக் கையில் ஏந்திக்கொண்டு, தன்னையும் இராமனுடன் காட்டிற்குப் போகென்று பணிப்பாளாயின் அதுவே தன் துயர்தீரத் துணையாமென்னுங் கருத்தினனாய் வந்து பணியும் இலக்குவனைச் சுமித்திரை அரிதின் நோக்கி,

ஆகாத தன்றா லுனக் கவ்வன மிவ்வ யோத்தி
மாகாத லிராமனம் மன்னவன் வைய மீந்தும்
போகா வுயிர்த்தாயர்நம் பூங்குழற் சீதை யென்றே
யேகா யினியிவ்வயி னிற்றலு மேத மென்றாள்

[இராமன் செல்கின்ற அவ்வனம் உனக்கும் அயோத்தி ஆதல் வேண்டும். மிகுந்த அன்புடைய இராமனே நம் மன்னவன் ஆவான். அவன் அரசைக் கொடுத்துக் காடு போவதைக் கண்டும் போகாத உயிருடைய தாய்மார் இனி உனக்கு, அழகிய கூந்தலையுடைய சீதையே; என்று கருதி நீ இராமனுடன் செல்லக்கடவாய். இனி இவ்விடத்தில் நீ நிற்பதுங் குற்றமாகும்—என்றாள்]

பின்னும் பகர்வாள் மகனேயிவன் பின்செ றம்பி
யென்னும் படியன் றடியாரினி லேவல் செய்தி
மன்னுந் நகர்க்கே யிவன்வந்திடின் வாவ தன்றேல்
முன்னம் முடியென் றனள் வார்விழி சோர நின்றாள்.

[மேலும் சொல்வாள் அச்சுமித்திரை—மகனே, இவன் பின்னே செல்லும் தம்பியென்னும் உறவிலன்று நீ ஒழுக வேண்டியது. அவனது அடியாரைப்போல் நீ அவனுக்கு ஏவல் செய்யவேண்டும். நிலைபெற்ற நகரத்திற்கு இவன் மீண்டானாயின் நீயுங் கூடவா. அப்படி மீளானாயின் நீ அவனுக்குமுன் மாண்டுபோ—என்று விதித்துத் தன் கண்களினின்று நீர்பெருக நின்றாள்]

குலக்கோசலைக்குக் குறைந்த நலத்தவளல்லள் இச் சுமித்திரை. தன் மகனுக்குரிய நாட்டினை மாற்றவள் மகன் பரதனுக்கு நல்கிட உவந்து ஒவ்வினாள் அவள். இவளோ, மாற்றவர் இருவரில் ஒருத்தி இன்னொருத்தியின் மகனுக்குக் காடளிக்கத் தானுந் தன் மகனுக்கு அக்காட்டினைத் தாழாது தந்தவோர் பெருமையால் திகழ்கின்றாள். இன்னணம் ஒருவரை யொருவர் பெருமையில் விஞ்சும்படிவைக்கின்ற விழுப்பத்தினாலன்றோ கம்பர் பெருமான்தன் முழுப்பெருமையையும் தானே காட்டாமுன்னம் நம்மால் கருதற் கரிதாகின்றது.

இன்னவாறு தமதன்னையின்பால் அரிதின்விடை கொண்ட பின்னர்,

இருவருந் தொழுதன ரிரண்டு கன்றுநீ இ
வெருவரு மாவினிற் றாயும் விம்மினாள்
பொருவருங் குமாரரும் போயி னார்புறந்
திருவரைத் துகிலொரீஇச் சீரை சாத்தியே

[இராமலக்ஷ்மணரிருவரும் சுமித்திரையை வணங்கினர். அப்பொழுது அவ்வன்னையாகிய சுமித்திரையும், இரண்டு கன்றுகளை விட்டுப்பிரிந்து அஞ்சுகின்ற பசுவைப்போலப் புலம்பினாள். நிகரற்ற அம்மைந்தரும் தம் அரையில் தரித்த பட்டாடைகளைக் களைந்து விட்டு மரவுரியைஉடுத்திக்கொண்டு வெளிச் சென்றார்].

அன்னை பணியால் இலக்குவனும் சீரைசாத்தினான். தன்னுடன் வனமேக இராமனோ இன்னும் அவனுக்கு விடைதந்திலன். ஆயினும் என். "கரிய செம்மல் ஒருவனைத் தந்திடுதி" என்ற கோசிகன் பின் இலக்குவன் கேளாமல் தொடர்ந்தது தக்கவாயது போன்றே, இப்பொழுதும் அழையா முன்னர் அடவிக்குச் செல்வதல்லால் வேறோர்விதி கண்டிலன். பொருளொடு நிழல்தவழ யாரே புகல வேண்டும்.



ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட், சத் வைத்தியசாலை, நஞ்சன்கூடு.
நஞ்சன்கூடு பல்பொடி
குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்
SADVAIDYASALA NANJANGUD
THE UNITED CONCERN, MADRAS
டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்களுக்கு ரூ. (2-0-0) பிரான்சு:
டிப்போ, பம்பாய்
கல்கத்தா.
NANJANGUD TOOTH POWDER
மதுரை
காஞ்சீபுரம்.

# கலா நிலயம்

## 1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :— கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவிய வியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
5. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
6. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
7. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மலர்வனம் பழமுதிர்சோலை, மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரிடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜீனோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

## 2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
2. அப்பர்:—கட்டுரைகள் 50
3. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
4. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
5. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
6. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
7. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
8. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துள்ளது.
9. நம்மாழ்வார் வைபவம்:— கட்டுரைகள் 12.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய் மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

## 3-வது வால்யூம் 1930-ஆம் ஆண்டுப் பிரதிகள்.

1. கம்பராமாயணம்:— மந்திரப்படலம், மந்தரை சூழ்ச்சிப் படலம் கட்டுரை 48.
2. குறுந்தொகை:— 400 பாட்டுகளும் உரையுடன் 34.
3. தமிழ்ப்பாடம்:—கிருஷ்ணன் தூது, நைடதம், நளன் தூதுப் படலம். இலக்கணம் புணரியல் முற்றுப்பெற்றது.
4. அப்பரும் 64 கலைகளும்:—36.
5. நம்மாழ்வார் வைபவம்:—34.
6. இலஞ்சிப்பாவை:—இதழ்கள் 24.
7. ஆச்சரிய சூடாமணி:—(ஒரு மொழிபெயர்ப்பு நாடகம்) 15.
8. மானதசாத்திரம்:—(நடத்தை) 32. மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், சிறுகதைகள், மலர்வனம், பழமுதிர்சோலை, மாதவிமாதவம் ஆகிய பல கட்டுரைகள்.

**மேற்கூறிய மூன்று வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.**

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

| உள்நாடு | ரூ. | அ. | ப. | வெளிநாடு | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| பைபிண்டு செய்யாதது | 8 | 0 | 0 | பைபிண்டு செய்யாதது | 9 | 8 | 0 |
| காலிகோ கில்ட் | 9 | 8 | 0 | காலிகோ கில்ட் | 11 | 0 | 0 |
| ஆப்லெதர் கில்ட் | 10 | 0 | 0 | ஆப்லெதர் கில்ட் | 11 | 8 | 0 |

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::





# ASOKA SALT

## அசோகா சால்ட்.

(ரிஜிஸ்டர்ட்.)

(அசோகா—உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் நோய்கள் வாராமல் தடுப்பதற்கும் அசோக—உப்பு ஓர் அரு மருந்து.

உணவை நன்றாகச் சீரணஞ் செய்து, யாதொரு வருத்தமுமின்றி நாள்தோறும் மலத்தைக் கழிக்கும் சிறந்த குணமுள்ளது.

அசோகா—உப்பு ஜலத்தில் போட்டால் பால் பொங்குவதுபோலவே பொங்கி வரும்.

விலை ரூ. 1—8—0. தபால் செலவு வேறு.

அசோக கம்பெனி
லிமிடெட்,
சென்னை.



# சுகவாழ்வு

நாம் நமது நாட்டில் சுகமாக வாழவிரும்பினால் வியாதிகள் என்னும் சத்துருக்களுக்கு இடங்கொடாமல் நமது தேகத்தைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். நீங்கள் தேக அசதி, மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகமின்மை, மூத்திர சம்பந்தமான வியாதிகளால் கஷ்டப்பட்டால் உடனே,

## ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

உபயோகியுங்கள். தேகத்தை வஜ்ர சரீரமாக்கி வைரக்கற் கோட்டையைப் போல் பாதுகாக்கும் 32 மாத்திரைகளடங்கிய டப்பி 1க்கு ரூபா 1

இனும் ! இனும் ! !

போஜன விதி

உடனே விலாசத்தைத் தெரிவியுங்கள்.

ஆதங்க நிக்ரஹ
ஔஷதாலயம்,
26, பிராட்வே,
மதராஸ்.



ஏற்படுத்தியது] **நாஷனல்** [1906.

## இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்ஸ்,
7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

இந்தியர்களால் நடத்தப்படும் கம்பனிகளில் தலையாயது

1930 வருஷாந்திர ரிபோர்டின் சுருக்கம்.

| | |
|---|---|
| 1930 வருடம் நிறைவேறிய புது பிஸினெஸ் | ரூ. 1,13,55,069. |
| 1930 வருடத்தில் அதிகமான லைப் அஸ்யூரன்ஸ் பண்டு | 11,51,813. |
| பிரீமியம் வரும்படி | 30,83,936. |
| 1930 வருடத்தில் கிடைத்த வட்டி வரும்படி | 7,47,608. |

மொத்த அஸ்ஸெட், ரூ. 1,65,00,000க்கு அதிகம்

1930 வருடத்தில் நடை முதலிலிருக்கும் லைப் அஸ்யூரன்ஸின் மொத்தம் 6,55,70,916.

பிரீமியம் மிகக்குறைவு, பாலிஸி நிபந்தனைகள் மிகவும் தாராளமனவை. எல்லாவித லைப் அஸ்யூரன்ஸ்களும் எடுத்துக் கொள்ளப்படும்.

ஏஜென்ஸி எடுத்துக்கொள்வது உங்களுக்குஇலாபமாகும்

113, அரமனைக்காரன் தெரு, சென்னை. } T. அனந்தாசாரி, B. A. செக்ரடரி, மதராஸ் பிராஞ்ச்.

R. G. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்.

நாஷனல் பையர் அண்டு ஜனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்.,
7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

தீ, மோட்டார்கார் மோட்டார் ஸைகில் இன்ஷூரன்ஸ்.
கேட்போருக்கு விவரங்கள் அனுப்பப்படும்.



## - பாரதி -

சுதந்திரம் — சமத்வம் — சகோதரத்வம்.

ஓர் தேசிய மாதப் பத்திரிகை.

மூன்றாவது ஆண்டு நடக்கின்றது.

| | |
|---|---|
| உள் நாடு வருட சந்தா | ரூ. **2 0 0** |
| வெளி நாடு ,, | ரூ. **2 8 0** |

தனி (சாம்பிள் காபி) பிரதி விலை அணா 5. வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஜாதிமத கட்சி பேதங்களின்றித் தேசவிடுதலைக்காக உழைக்கும் தேசீய மணம்கமழும் பத்திரிகை.

ஆசிரியர்:—R. நாராயணசாமி.

விலாசம்:—நவீன பாரதி ஆபீஸ்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.



குறைந்த விலை ! நிறைந்த விஷயம் !
சிறந்த கதை ! உயர்ந்த பதிப்பு !

பாவலர், நாவலர், மற்றி யாவரும் விரும்பும் பாச்சுவை ததும்பப் புதுமை பெற்றிலங்கும்

## சுகுணவதி அல்லது மனம்போல மாங்கலியம்

இனிமை செறிந்த தமிழ் நாவல்

ஸ்ரீமான். மாங்கை. சா. கிருஷ்ணய்யர் எழுதியது.

விலை ரூபா ஒன்றே

ஸ்ரீ கிருஷ்ணா பப்ளிஷிங் ஹௌஸ்,
மைலாப்பூர், மதறஸ்.

# ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM C.C.S.

FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M.A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidently in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the Cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

**Price Rs. 5-8-0 (V.P. Charges extra)**

**"KALANILAYAM"**
VELLALA STREET,
Purasawalkam, MADRAS.

# கலா நிலய முன்னைய இதழ்கள்

**மூன்றாண்டு இதழ்களும் பயிண்டுசெய்தும் செய்யாமலும் கிடைக்கும்**

முதல் ஆண்டு:—ராமாயணம்—பால காண்டம், அகப்பொருள் வரலாறு, காந்தார நாட்டுக் கட்டழகி எனும் சிறந்த நாவல், மலர் வனம், பழமுதிர்சோலை, தமிழ்ப் பாடம், கண்ணப்ப நாயனார் சரித்திர ஆராய்ச்சி, முதலிய பல அரிய கட்டுரைகள்.

இரண்டாமாண்டு:—அப்பர் தேவார ஆராய்ச்சி, நாவல், ஆங்கிலக் கட்டுரை மொழிபெயர்ப்பு, கம்பராமாயணம்—பாலகாண்டம், அகப்பொருள், தமிழ்ப் பாடம் ஆய பல அரிய கட்டுரைகள்.

மூன்றாமாண்டு:—கம்பராமாயணம்—அயோத்தியா காண்டம், மானத சாத்திரம், குறுந்தொகை (உரையுடன்) ஸமஸ்கிருத நாடக மொழிபெயர்ப்பு. அனைய பல கட்டுரைகள்.

தோல் பயிண்டு—விலை உள்நாடு ரூ. **10—8—0**, வெளிநாடு ரூ. **12—0—0.**

விலாசம்:— (தபால் சார்ஜ் உள்பட.)

**கலா நிலயம், புரசைபாக்கம், சென்னை.**

# டாக்டர் நஞ்சுண்டராவ் பேதிங் ஆயில்.

இந்த எண்ணெயை ஸ்நானத்திற்கு உபயோகித்து வந்தால் மூளைக்குக் குளிர்ச்சியையும் திரேகத்திற்கு ஆரோக்கியத்தையும் ஞாபக சக்தியையும் பெருக்கும். சில கண் சம்பந்தமான வியாதிகளையும் நீக்கிவிடும்.

அல்லது ஸ்நானத் தைலம்

விலை ரூபா **1.** எங்கும் கிடைக்கும். ஏஜண்டுகள் தேவை.

எம். சி. என்ஸ். பார்மசி, திருவல்லிக்கேணி, மதராஸ்.

சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய

# திரு அருட்பா

வசனப்பகுதி

ஆ. பாலகிருஷ்ணபிள்ளை பி. ஏ. எம். எல்

அவர்களது அடக்க விலைப்பதிப்பு.

புஸ்தகவிலை, 4, அணாவும், புஸ்தக போஸ்ட் செலவிற்காக, 1 அணாவும், ஆக, 5 அணா தபால் ஸ்டாம்புகள் அனுப்பிப்பெற்றுக் கொள்ளலாம்.

கலாநிலயம்—புரசைபாக்கம் சென்னை.




## மதிப்புரை

சுகுணவதி அல்லது மனம்போல மாங்கல்யம்

ஆசிரியர் மாந்தை. சா. கிருஷ்ணையர். பிரசுர நிலயம், ஸ்ரீகிருஷ்ண பப்ளிஷிங்ஹௌஸ், மயிலாப்பூர். விலை ரூ 1.

"சுகுணவதி அல்லது மனம்போல் மாங்கல்யம்" என்னும் நாவல் வரப்பெற்றோம். இதன் ஆசிரியர், சுதேசமித்திரன், நவசக்தி, விவேகபோதினி, சிந்தாமணிபோன்ற பல பத்திரிகைகளுக்குச் சில வாண்டுகளாகக் கட்டுரை எழுதிவருகின்றாராதலால் தமிழுலகம் அவரை நன்கறியும். இந்நூலிற்கு முன்னுரையும் சிறப்புரையும் தந்துளோர், "உண்மைக் காதல், இறையன்பு, தீயோரியல்பு, செல்வச்செருக்கின் இழிவு, நற்குணத்தின் சிறப்பு ஆதியவற்றை இக்கதை கொண்டு விளக்குவதைப் படிப்பவர் கண்டு இன்புறுவர்" என்று கூறியுள்ளார். ஆசிரியருக்கு வடநூற் பயிற்சியும் உளதாகையால், இலக்கண மமைக்குந் தளையுட்படாது இவர் விலகி நயமும் கெடாது எளிதில் எல்லோரும் படித்தறியும் வண்ணம் இந்நூலை அமைக்க இயன்றதென இன்னதற்குப் புகழுரை தந்த ஸ்ரீமான் C R. சீனுவாஸ ஐயங்கார் கூறுகின்றார். இன்னபடி பலரால் வரவேற்கப்பட்டுள இந்நாவலின் கதையின்போக்குப் பின் வருமாறு:—

தனது எஜமானனைக் கொன்று, கொள்ளையிட்ட ஒரு எளியவன், சந்திரசேகர பிரபுவானான். அவனுக்கு அமிர்தவல்லி என்றவொரு பெண்ணும், சித்திரசேனன் என்றவொரு பிள்ளையும் இருந்தனர். குடந்தைச் செல்வரான அழகியசிங்கர் அமிர்தவல்லியை மணந்து சுகுணவதி யென்றவொரு பெண்ணைப் பெற்றார். குடந்தையில் வாழ்ந்த சுதர்சனர் என்றவோர் சிறுகுடித்தனக்காரருக்குக் குணநலங்கள் வாய்ந்த ஒரு பிள்ளையிருந்தான். அவன் எழிலும் கல்வி ஆற்றலும் உடையவன். அழகிய தன் செல்வியையக்குணசீலனுக்குக் கொடுப்பதெனத் தீர்மானித்து அவனைச் சந்திரசேகரபிரபு தன் பிள்ளைபோல் நடத்திவந்தார். பெண்ணுக்கும் பிள்ளைக்கும் இடையே காதற்செடி வேரூன்றி வளர்ந்தது. இவ்வளவில் காதலுக்கு இடையூறொன்று நிகழாது கதைநடப்பது எங்ஙனம்.

சந்திரசேகர பிரபு இறந்தார். அவர் மகன் சித்ரசேனன் தீயவழி படர்ந்து பொருளிழந்து புகழிழந்து துன்புற்றான். அவன் தமக்கை அமிர்தவல்லி தன் தம்பியின் நிலைக்கு இரங்கினளாய், அவனைத் திருத்தி நல்நிலைக்குக் கொண்டுவர எண்ணினாள். இன்னதற்குத் தன் மகள் சுகுணவதியை அவனுக்குக் கொடுக்கத்தீர்மானித்துத் தன்கணவனை உடன்படச்செய்தாள். அவரும் உடன்படக் குணசீலன் சுகுணவதியை இழக்க நேர்ந்தது. எனினும் தம்பியின் சிறுகுணம் இடைநிற்க, அமிர்தவல்லியின் எண்ணம் நிறைவேறவில்லை. இறுதியில் பெற்றோர் தம் பிழைகண்டு குணசீலனுக்கே தம் பெண்ணை மணம்செய்து வைத்தனர். சித்ரசேனனும், தானுற்ற துன்பத்தாலும், அவமானத்தாலும் கயமை தீரச் சிறந்தான். குணசீலனும், சுகுணவதியும் இனிது வாழ்ந்து ஒரு ஆண்மகவைப் பெற்று மகிழ்ந்தனர்.

இப்புத்தகம் நல்ல பெதர்வொயிட் பேப்பரில் அச்சிடப்பெற்றுளது. படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. 168 பக்கங்கள்கொண்ட இப்புத்தகத்தின் விலை ரூபாய் ஒன்று. வேண்டுவோர் பிர[illegible] எழுதிப் பெற்றுக் கொள்ள[illegible]

## வர்த்தமானம்

நேப்பாள தேசத்து மன்னர் மரண தண்டனை விதிக்கும் முறையைத் தம்நாட்டினின்று அகற்றிவிட்டார் என்று ஒரு செய்தி கூறுகின்றது.

***

வழக்குவாதத் தொழிலில் கியாதி பெற்ற நார்ட்டன் துரை அவர்கள் இறந்தனர் என்று லண்டன் செய்தி கூறுகின்றது இறக்கும் காலத்தில் அவர் வயது 80.

***

தொழிலாளர் கட்சியினர் ஆட்சியினால் சிறக்கும்இங்கிலாந்தில் 18½ லட்சம் பேர் வேலையில்லாது திண்டாடுகின்றனர் என்று அயல்நாட்டுச் செய்தி கூறுகின்றது.

***

ஆகஸ்டு முதல் வாரத்தில் கனடாவில் கூடவிருக்கும் சர்வதேச கிறிஸ்தியர் மஹாநாட்டிற்கு ஸ்ரீமான் O. கந்தஸாமி செட்டியார் இந்தியப் பிரதிநிதிகளில் ஒருவராய்ச் சென்றிருக்கின்றார். இந்தியாவிலிருந்து 37 பேர் செல்கின்றனர்.

***

காந்தி அடிகள் சீமை செல்லுங்கால் போட்டுக் கொள்ளவேண்டிய உடையைப் பற்றிப் பத்திரிகையில் பலர் பலவிதமாக எழுதுகின்றனர். காந்தியடிகள் இது விஷயமாய் யோசனைசெய்து வருகின்றனர். இன்னும் முடிவு ஒன்றும் ஏற்படவில்லை.

***

1930-ம் வருடத்தில் முதல் ஆறுமாத காலத்தில் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு 1 கோடியே 60 ஆயிரம்பொன் மதிப்புள்ள ஜவுளி சாமான்கள் இறக்குமதியாயின வென்றும், இவ்வருடம் முதல் ஆறுமாத காலத்தில் (அதாவது 1931 ஜனவரி முதல் 1931 ஜூலை வரையில்) 29 லட்சத்து 37 ஆயிரம் பொன் மதிப்புள்ள ஜவுளிதான் இறக்குமதியாயுள்ளனவென்றும் தெரிகிறது.

***

ஔவை விடுதி:—சென்னை வேப்பேரி, ரண்டால்ஸ் ரோடு, 6-ம் நெம்பர்க் கட்டடத்தில் பெண்களுக்காக ஔவை விடுதி ஒன்று 1930-ம் ஆண்டு ஜூலை மாதம் முதல் ஏற்பட்டு நடந்து வருகிறது. இதில் நடுத்தர ஏழைப்பெண்களுக்குக் கல்வியும் கைத்தொழில்களும் கற்பிக்கப்பட்டு வருவதுடன் ஏழைகளுக்குச் சாப்பாடும் இட வசதியும் அளிக்கப்படுகின்றன. இது ஒன்பது மாதர்கள் அடங்கிய கமிட்டியின் மேற்பார்வையில் நடந்து வருகிறது. இதற்குச் செல்வர்கள் பொருளுதவி செய்யவேண்டுமென்று நிர்வாகிகள் கேட்டுக் கொள்கிறார்கள்.

***

உலகின்கண் உள்ள மாபெருங்கோயில்களுள் இத்தாலியா தேசத்திலுள்ள மிலான் நகரத்துக் கோயிலே மிகப் பெரியதாம். இதனுள் ஏககாலத்தில் 37,000 பெயர்கள் சௌகரியமாகக் கூடியிருக்கலாமாம். இதற்கு அடுத்தபடியாக 32,000 பெயர்கள் கொள்ளக் கூடிய உரோமன் சர்ச் என்னும் கோயிலாம்.

***

புதுக்கோட்டை சமஸ்தானத்தார் ஜனங்களது வரியை உயர்த்தினர் என்று ஜெனங்கள் கலகம் செய்தனர். வீடு வாசல்களும், அரசாங்க நிலங்களில் சிலவும் தாக்கப் பட்டன என்றும் இப்பொழுது கலகம் அடங்கியுளது என்றும் தெரிகின்றது. ஜனங்கள் சமாதான முறையில் தங்கள் குறைகளைக் கூறினால், [illegible]க்குறைகள் அரசாங்கத்தாரால் கவனிக்கப்படும் [illegible] அரசாங்க அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

188926
JC
M31.4-2-8

KALANILAYAM.
REG. NO. M, 2324.

:: பிரபல ஜோதிஷர் :: மஹாராஜாக்களாலும், ஆயிரக்கணக்கான பிரபுக்களாலும் தங்கமெடல்களும் நற்சாட்சிப்பத்திரங்களும் பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. ஒரு வருஷ பலன் எழு ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8 (ஜாதகம் அல்லது எழுதும் நேரம்தேவை) (ஜ்யோதிட ஞானபோதினி விலை அணா 8. பண்டித காழியூர்,

ம. ஸ்ரீனிவாஸாசாரியார்,
218 தங்கசாலை வீதி, மதராஸ்.

—:வைத்திய ரத்ன:—

பண்டிட். D.கோபாலாசார்லு அவர்களின்

ESTD 1898

"ஜீவாமிருதம்"

பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப்போக்கி, தேகபலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது

எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரூ 3-4-0

ஆயுர்வேதாஸ்ரமம்

தபால் பெட்டி. 287. மதராஸ்.

கேட்லாக் இனம்.

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ 18—0—0

காரனேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0

தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது. 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலா நிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

நம்பிக்கையான புஸ்தக வியாபாரிகள்

தமிழ், இங்கிலீஷ் தெலுங்கு, ஹிந்தி புஸ்தகங்கள் எல்லாம் எங்களிடம் கிடைக்கும். தேவையான புஸ்தகங்களுக் கெழுதவும்.

கே. எஸ். மணியம் அண்டு கோ.,
புஸ்தக வியாபாரிகள், இராயப்பேட்டை, மதராஸ்.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்குஅச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங்கள் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை,
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.

ஆயுர்வேத ரத்ன பண்டிட்
டாக்டர் N. V. ஸ்ரீராமாசார்லு
அவர்களின்

'மஹா சந்தனாதித் தைலம்'
(ரிஜிஸ்டர்ட்)

ஒப்புயர்வற்ற இத்தைலம் மூளைக்குப் பலத்தை அளித்து ஞாபகசக்தியை வளர்ப்பதிலும் நரையை நீக்கி, கூந்தலைக் கருமையாகவும் மழமழப்பாகவும் வளர்ச்சி செய்து அறிவையும் ஆற்றலையும் வளர்ப்பதில் பெயர்பெற்றது. கபால உஷ்ணம், மறதி மனச்சோர்வு, மயக்கம் மந்தப் பார்வை, தலைவலிபோன்ற நோய்களைப் போக்கி ஆனந்தத்தை அளிக்க வல்லது. மூளையைக் குளிர்ச்சி செய்து மனோரம்மியத்தை வளர்க்கும் இத்தைலம் ஆயிரக்கணக்கானவர்களால் போற்றப்பட்டது. ஒரு முறை உபயோகித்துப் பார்த்தால் இதன் அபாரசக்தியும் பெருமையும் நன்கு விளங்கும்.

1 மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய 12 அவுன்ஸ் புட்டி விலை ரூபா 5.

மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி
லிமிடெட், சென்னை.

மானேஜர்.—வி. ரகுபதி, B.A., B.L.
தபால் பெட்டி 151, சென்னை.
தந்தி விலாசம் 'கல்பம்' சென்னை.

ஏஜண்டுகள் தேவை. விவரத்திற்கு எழுதவும்.
கேட்லாக் இனம்.

தமிழன்பர்களே! இவரைத் தெரியுமா?

இவரே தற்காலத் தந்தியையும், டெலிபோனையும் கிராமபோனையும், சினிமாவையும், மின்சார விளக்கையும் கண்டுபிடித்தவர். கம்பியில்லாத் தந்திக்கு வழிகாட்டியவர். ஏழைக் குடும்பத்தில் 1847-ல் பிறந்து, தாய் சொல்லிக்கொடுத்த கல்வியினால் பத்திரிகை விற்பவராயிருந்து எண்ணிலாப் புதுமைகளைச் செய்து அமெரிக்காவில் பெருஞ் செல்வராய்த் திகழும்,

தோமாஸ் ஆல்வா எடிசன்

இவருக்கு இப்போது வயது 84. இன்னும் ஊண் உறக்கமின்றிப் புதிய கருவிகளைக் கண்டுபிடித்து வருகின்றார். இப்போது இலைகளினின்றும் ரப்பர் எடுக்க முயற்சிக்கின்றார். இவர் ஹென்ரி போர்டுக்கு நண்பர்.

இவரது வரலாறு படிக்கப்படிக்க இன்பந்தரும். ஆப்டோன் படங்களுடன் உயர்ந்த காகிதம் அழகிய கட்டடம். விலை ரூபா 1-4.

தபால் செலவு அணா 4.

சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகம் லிமிடெட்.,
6, பவளக்காரத் தெரு, சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)